விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 18 வெள்ளிக்கிழமை (03.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 258

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## தென்மராட்சியில் மேலும் 106 பேருக்கு கொரோனா

### கைதடி முதியோர் இல்லத்தில் நேற்றும் 72 பேருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று மேலும் 106 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 72 தொற்றாளர்கள் கைதடி முதியோர் இல்லத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 9 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 25 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

அதேவேளை, கைதடி முதியோர் 15

கோவிட் தொற்றால் மேலும்

## 109 ஆண்கள் உட்பட 204 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 204 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய 15

18 - 30 வயதினருக்கான

## தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பம்



(கொழும்பு)

18 - 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்புசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய 15

ஊரடங்கு நீடிக்கப்படுமா?

இறுதி முடிவு இன்று வெளியாகும்

05ஆம் பக்கம் பார்க்க

கோவிட் வைரஸின் தாக்கத்தால்

# அபாயகரமான கட்டத்தில் இலங்கை உள்ளது

### சுகாதார வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை



(கொழும்பு)

கொரோனா வைரஸின் தாக்கத்தால் இலங்கை மிகவும் அபாயகரமான கட்டத்தில் உள்ளது என சுகாதார வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆசியாவில் மிக மோசமான கோவிட் தாக்கம் கொண்ட நாடாக இலங்கை உள்ளது என வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)

கொரோனா

## +3,619

(கொழும்பு)

கொரோனாத்தொற்று உறுதியான மேலும் 3,619 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 447,749 ஆக அதிகரித்துள் 15

அச்சுவேலியில் மின்னல் தாக்கி

## மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

மின்னல் தாக்கியதில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். 15

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாவால் உயிரிழப்பு

### நேற்று 194 பேருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாவால் உயிரிழந்ததுடன் யாழ்.குடாநாட்டில் நேற்று 194 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் ஊடகவியலாளர் ஒருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். 15

அனலைதீவில்

## கர்ப்பவதிகள் இருவர் உட்பட ஐவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனலைதீவில் நேற்று மேற்கொள் 15

## வவுனியாவில் மேலும் 159 பேருக்கு கோவிட்

### இருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மேலும் 159 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதோடு வைரஸ் தொற்றால் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வவுனியாவில் 15

## யாழ்.போதனா பணிப்பாளராக மருத்துவர் சத்தியமூர்த்தி

### இன்று மீண்டும் கடமைகளை பொறுப்பேற்கின்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் பதவியை நாட்டில் நிலவும் கொரோனா பேரிடரினை கருத்தில் கொண்டு மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி இன்று மீண்டும் பொறுப்பேற்கிறார்.

பிரிட்டனில் மேற்படிப்புக்காக கடந்த 15

### கொரோனாவால் மரணமானவர்களுக்காக

# இன்று மாலை வீடுகளில் விளக்கேற்றி பிரார்த்தியுங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள்

(கொழும்பு)

பரவி வருகின்ற தொற்று நோய் கட்டுப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பில் இந்த நோயால் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்காக இன்று மாலை 06.06க்கு பொதுமக்கள் தமது வீடுகளில் விளக்கேற்றி பிரார்த்தனை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி, நாட்டு மக்கள் அனைவரிடமும் இந்த வேண்டுகோளை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கோவிட் தொற்று பாரியளவில் நாடு பூராகவும் பரவியுள்ளது. இதுவரையும் 440,000 நோயாளர் நாடளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ளதோடு 9ஆயிரம் பேருக்கும் மேலானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் சிகிச்சைபெற்று வருகின்றகோவிட் தொற்றாளர்கள் குணமடைய வேண்டும்.

அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை வழங்கிகோவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்ற வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்கள், பொதுச்சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் ஆசீர்வதிப்பதற்கான சந்தர்ப்பமாகவும் இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் உளத்தூய்மையுடனும் ஒரே எண்ணத்துடனும் ஈடுபடுவதன் மூலம் நாட்டில் தொற்றியுள்ள கோவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பைப் பெற அழைப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எம்.மரிக்கார், மனுஷ நாணயக்கார ஆகியோர் தெரிவித்துள்ளனர். (ம-03)


**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1993 இல் பிறந்த ஆரியன். செவ்வாய் - 10. ரோகினி நட்சத்திரம், இடபராசி முதலாம் பாதம். தனியார் வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

சீதனம் பேச்சளவில் எதிர்பார்க்கப்படவில்லை.

**077 582 7035**


### மருத்துவபீடத்தில் இடைநிறுத்தப்பட்ட

# பிசிஆர் பரிசோதனைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் இடை நிறுத்தப்பட்டிருந்த பிசிஆர் பரிசோதனைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கோவிட்-19 பரவல் அதிகரித்து வரும் நிலையில், பிசிஆர் பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்வதற்கான ஆளணியை நியமிப்பதற்குத் துணைவேந்தர் நடவடிக்கை எடுத்ததையடுத்து மூன்று பேர் பல்கலைக்கழகத்தின் நிதி மூலத்தில் நியமிக்கப் பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட கோவிட்- 19 பிசிஆர் ஆய்வுகூடத்தில் பணியாற்றி வந்த 4 மருத்துவ ஆய்வுகூடத் தொழில்நுட்பவியல் பயிலுநர்கள் உள்ளகப் பயிற்சிக்கான நியமனம் பெற்றுச் சென்றதனால் பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆளணிப் பற்றாக்குறை காரணமாக கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து மருத்துவ பீடத்தில் பிசிஆர் பரிசோதனைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதனையடுத்து உடனடியாக ஒப்பந்த அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் நிதியில் இருந்து தற்காலிகமாகத் தேவையான ஆளணியை உள்வாங்குவதற்குத் துணைவேந்தர் பணித்திருந்தார்.



நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நேர்முகத் தேர்வின் மூலம் மூன்று பேரை நியமிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதனால், விரைவில் பிசிஆர் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-03,33)

# விடுதலை புலிகள் மீதான தடையை நீடிக்க பிரித்தானியா தீர்மானம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை தொடர்ந்து நீடிப்பதற்கு பிரித்தானியாவின் உள்துறை அமைச்சு தீர்மானித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவில் 2000 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பின்னர் பிரித்தானியாவின் உள்துறை அமைச்சின் செயலாளரினால் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதன்மூலம் ஐரோப்பிய வலய நாடுகள் உள்ளிட்ட உலகளாவிய ரீதியில் 30 நாடுகளுக்கும் மேல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


**நன்றி நவில்கின்றோம்**

" கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது " (சங்கீதம் 116 : 15)



பிறப்பு 19.01.1959

இறப்பு 29.08.2021

**செல்வி இராசலட்சுமி கந்தையா (பேள்)**

( மானிப்பாய் பிரதேச சபை ஊழியர் )

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசலட்சுமி கந்தையா கடந்த 29.08.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகமுத்து தம்பதியரின் செல்வ மகளும் இராசநாயகம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இந்திராணி, இராசாணி, காலஞ்சென்ற இராசரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அந்தோனிப்பிள்ளை, சபாரத்தினம், காலஞ்சென்ற வர்ணேஸ்வரி, காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னார் ஜெபவிந்தை பூரண சுவிசேஷ சபையின் விசுவாசி ஆவார்.

துயரப்படும்போது உதவிய வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள் அனைவருக்கும் அடக்க ஆராதனையில் வழிநடத்திய போதகர்கள், விசுவாசிகள் அனைவருக்கும் குடும்பத்தார் ஆகிய நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. 077 034 2824 077 139 0331 குடும்பத்தினர்


# தடுப்பூசியை விரைவாக பெற்றுக்கொள்ளுங்கள்

## யாழ். மக்களுக்கு அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மிக விரைவாகவும் அமைதியான முறையிலும் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் கட்ட தடுப்பூசி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பொதுமக்கள் அனைவரும் தமது இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை தாமதிக்காது அடுத்த ஓரிரு நாட்களுக்குள் பெற்று கோவிட் - 19 நோய்த் தொற்று தாக்கத்திலிருந்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படக்கூடிய சூழ்நிலை அதிகமாகக் காணப்படுவதால் எவ்வித தயக்கமின்றி இத் தடுப்பூசி விடயம் தொடர்பில் அரசாங்கம் மற்றும் சுகாதார தரப்பினர் விடுத்துள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உரிய தடுப்பூசி செலுத்தப்படும் மையங்களுக்கு சென்று அடுத்து வரும் நாட்களில் விரைவாக தமது தடுப்பூசியைப் பெற்று கோவிட் -19 தொற்றிலிருந்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அரசாங்க அதிபர் க.மகேசன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

### எழுமாற்று அன்டிஜன் பரிசோதனை

# சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் உள்ளிட்ட 25 பேருக்கு கோவிட் தொற்று

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் நேற்று வியாழக்கிழமை 103 பேருக்கு எழுமாற்று அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில், சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் உள்ளிட்ட 25 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்றுறுதியான அனைவரையும் தனிமைப்படுத்தல் முகாமிற்கு அனுப்புவதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக சாவகச்சேரி பிரதேசத்தில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-03,18)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்:**
**27.08.1934**

**மறைவு:**
**21.08.2014**



## திருமதி.இராஜலிங்கம் மகாலட்சுமி

### நீளும் காலங்கள் தோறும் நீ வாழ்வாய் அம்மா!

நீராவி யடியில் லிங்கம்மா!
நின்நாமம் மறவார் யாரும்
ஊரோடு ஒன்றி வாழ்ந்த;
உன் சிறப்பை மெச்சும் ஊரும்
நீரடித்து நீரென்றும் விலகாது
அதுபோல உன்னன்பும் பிசகாதம்மா
பேரிலங்க வாழ்ந்த எம் தாயும்
பெருவாழ் விற்குறிகர் ஏதம்மா

பிள்ளைகள் சிறக்கவும் வைத்தாய்
பேரரை வியக்கவும் வைத்தாய்
இல்லையே என்பார்க் கெல்லாம்
இருப்பதைப் பகிர்ந்தே கொடுத்தாய்
நல்லதைச் செய்தே வாழ்ந்தாய்
நற்தவப் பேறும் பெற்றாய்
செல்வதி போன்றே வாழ்ந்து
சென்றவள் உனை மறப் போமா?

மனம் போல் " இராஜ லிங்கம்
மகா லஷ்சுமி இல்லம்" உங்கள்
நினைவினைச் சொல்லி அழகாய்
நிமிர்ந்ததே அம்மா! எங்கள்
கனவிலே அமைத்தே உமக்கு
காணிக்கை செய்தோம்; நாளும்
அனைவரும் இதனைப் பார்த்து
பூரிக்கச் செய்தோம் உமக்காய்!

காலங்கள் நீளும் போதும்
கனவிலும் நினைவிலும் நீங்கள்
ஆழமாய் நெஞ்சில் வாழும்
அன்புப் பொக்கிஷம் நீங்கள்
வாழும் காலம் முழுதும்
உங்களை வாழ்த்தி வாழ்வோம்
நீளும் உங்கள் நினைவில்
நித்தமும் உம்மைக் காண்போம்...

(7835)

## பிள்ளைகள்

# ரொனால்டோ புதிய சாதனை

சர்வதேச போட்டிகளில் அதிக கோல்களை அடித்த வீரராக தற்சமயம் கிறிஸ்டியானோ ரொனால்டோ மாறியுள்ளார்.

2021 செப்டெம்பர் முதலாம் திகதி போர்த்துகல், அல்கர்கேவ் மைதானத்தில் நடந்த போர்த்துகல் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான சர்வதேச கால்பந்து போட்டியின்போது அதிக கோல்கள் அடித்த சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

இந்த ஆட்டத்தில் அயர்லாந்துக்கு எதிராக போர்த்துகல் அணித் தலைவர் ரொனால்டோ தனது 110 ஆவது மற்றும் 111 ஆவது கோல்களை அடித்தார். இதன் மூலம் ஆண்கள் சர்வதேச கால்பந்தில் அதிக கோல்கள் அடித்த வீரராக காணப்பட்ட ஈரானிய அலி டாய்யின் (109 கோல்) முறியடிக்கப்பட்டது. (4-6)

# மூன்றாவது சுற்றில் ஒசாகா

நடப்பு சம்பியன் நவோமி ஒசாகா அமெரிக்க ஓபனில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். செர்பிய தகுதி வீரர் ஓல்கா டானிலோவிக் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப்போட்டியில். உடல் நலக் குறைவு காரணமாக பின் வாங்கியதைத் தொடர்ந்து ஒசாகாவின் இந்த முன்னேற்றம் ஏற்பட்டதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

ஒசாகா மூன்றாவது சுற்றில் கனடாவின் லெய்லா பெர்னாண் டஸ் அல்லது எஸ் தோனியாவின் கையா கனெபியுடன் மோதுவார். (4-6)

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை; கோலியை பின்தள்ளிய ரோஹித்




இந்த வருடத்தில் இதுவரை ஆறு சதங்கள் விளாசியுள்ள இங்கிலாந்து டெஸ்ட் அணி கப்டன் ஜோ ரூட் ஐசிசி டெஸ்ட் பட்ஸ்மேன் தரவரிசையில் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் இங்கிலாந்து அணி கப்டன் ஜோ ரூட் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இதுவரை முடிந்துள்ள மூன்று போட்டிகளில் மூன்று சதங்கள் விளாசியுள்ளார்.

முதல் இடத்தில் இருந்த கேன் வில்லியம்சன் 2 ஆவது இடத்திற்கு சரிந்துள்ளார். ஸ்டீவ் ஸ்மித் 3ஆவது இடத்திலும். மார்னஸ் லாபஸ்சேன் 4ஆவது இடத்திலும் உள்ளனர்.

ரோகித் சர்மா ஐந்தாவது இடத்திற்கு முன்னேறிய நிலையில், விராட் கோலி 6 ஆவது இடத்திற்கு சரிந்துள்ளார். பாபர் அசாம், டேவிட் வோர்னர், டி காக், ஹென்றி நிக்கோலஸ் முறையே 7 முதல் 10 இடங்களை பிடித்துள்ளனர். நீண்ட நாட்களுக்குப்பின் பின் விராட் கோலி முதல் ஐந்து இடங்களுக்கு கீழ் சரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

# ஆப்கான் கிரிக்கெட் அணிக்கு தலிபான்கள் பச்சைக்கொடி



ஆப்கானிஸ்தான் கிரிக் கெட் அணி டெஸ்ட் போட்டியில் பங்கேற்பதற்கு தலிபான் அனுமதி வழங்கி உள்ளது. இதன் மூலம் தலிபான் ஆட்சியில் சர்வதேச போட்டிகள் தொடர்ந்து நடைபெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் அணியை அவுஸ்திரேலியாவுக்கு விளையாட அனுப்ப அனுமதி கிடைத்திருப்பதாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைமை நிர்வாகி ஹமித் ஷின்வாரி தெரிவித்துள்ளார்.

தலிபான்கள் கடந்த முறை ஆட்சியில் இருந்த போது பல்வேறு விளையாட்டுகள் உள்ளிட்ட பெரும்பாலான பொழுதுபோக்கு அம்சங்களை தடை செய்தனர். விளையாட்டு மைதானங்களை, பொதுமக்கள் முன்னிலையில் மரண தண்டனையை நிறைவேற்றும் அரங்கமாக பயன் படுத்தினர். தற்போது கிரிக் கெட் போட்டியில் பங்கேற்க அனுமதி அளித்துள்ளனர்.

கொரோனா தொற்று காரணமாக அவுஸ்திரேலியா- ஆப்கானிஸ்தான் இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தள்ளி வைக்கப் பட்டது.

அந்தப் போட்டி வரும் நவம்பர் 27 ஆம் திகதி தொடங்கி டிசெம்பர் முதலாம் திகதி வரை ஹோபார்ட் மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்க ஆப்கானிஸ்தான் அணி அவுஸ்திரேலியா செல்கிறது. அவுஸ்திரேலியாவில் ஆப்கானிஸ் தான் அணி விளையாடும் முதல் டெஸ்ட் போட்டி இது வாகும். (4-6)


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

1. The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-Refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period Of Bid Security (Days) | Approximate BOQ Of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1 | Extension of NTS Lecture Hall 2nd Floor Stage I & Stage II | 500.00 | 495,000.00 | 91 | 24.66 | C6 |
| 2 | Extension of Renal Unit at Dialysis Unit | 500.00 | 127,000.00 | 91 | 6.31 | C7 |
| 3 | Internal Painting for JICA Building | 500.00 | 108,000.00 | 91 | 5.39 | C7 |
| 4 | External Painting of JICA Building and Painting Works for Old OPD Corridor, All Security Booth, Respiratory Unit | 500.00 | 53,000.00 | 91 | 2.62 | C8 |
| 5 | Renovation of Ward No 06 | 500.00 | 36,000.00 | 91 | 1.77 | C9 |
| 6 | Corridor Partition Work and Cupboard Fixing DSA Unit, Renovation Works at ATICU and Aluminium Partition for Cardiothoracic Unit | 500.00 | 27,000.00 | 91 | 1.34 | C9 |
| 7 | NTS Motor Room Roof repair, Repair of Rain water leakage from JICA Balcony, Floor Tile work at Skin Clinic, Iron Grills for Drainage Cannel in front of Mortuary and Cleaning Service Office and Supply Fixing of Curtins at Ward No 27 & Accountant Room | 500.00 | 25,000.00 | 91 | 1.24 | C9 |
| 8 | Construction of Toilet for Washing Room near Kitchen and Renovation of X-ray Department Toilets | 500.00 | 15,000.00 | 91 | 0.71 | C9 |

2. Bidding will be conducted through national competitive bidding procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development(ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding documents in english Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 06.09.2021 up to 21.09.2021 during office hours. The payment shall be made to the shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 22.09.2021, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

(C-2608)

03.09.2021

# இராசிபலன்

03.09.2021
ஆவணி 18, வெள்ளிக்கிழமை
ஏகாதசி காலை 6.44 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 4.39 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சந்திராஷ்டமம்: மூலம், பூராடம்
ஏகாதசி விரதம்

வளவன்

**மேஷம்** – கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** – பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், நினைத்த காரியத்தை முடித்து நிம்மதி காணும் நாள், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மிதுனம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கடகம்** – விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிறுசிறு மனசஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், திடீர் பயணமொன்று ஏற்படும் வாய்ப்புண்டு.

**கன்னி** – செல்வ நிலை உயரும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** – செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**விருச்சிகம்** – சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுற்றத்தார் வருகையால் மகிழ்ச்சி உண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணலாம்.

**தனுசு** – குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**மகரம்** – நட்பு வட்டம் விரிவடையும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** – நம்பிக்கைகள் நடைபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாய் இருக்கும் நாள், ஆரோக்கியம் சீராகும்.

**மீனம்** – தடைபட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், பூர்விக சொத்துக்களால் நன்மை உண்டு.

பொறுமை மிக்கவன் மற்ற எல்லாவற்றுக்கும் அதிபதியாவான்

# தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீடிக்கப்படுமா?

# முடிவு இன்று வெளியாகும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவிப்பு

**(கொழும்பு)**

**நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட் கிழமைக்குப் பின்னரும் நீடிக்கப்படுமா? இல்லையா? என்பது குறித்து இன்று தீர்மானிக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.**


நாட்டில் கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. 30 ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்ட இந்த ஊரடங்கு பின்னர் செப்டெம்பர் 6 ஆம் திகதி திங்கட் கிழமை வரை நீடிக்கப்பட்டது.

இந்நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்க வேண்டும் என கொவிட் கட்டுப்பாட்டு விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே நேற்று முன்தினம் வலியுறுத்தினார்.

அத்துடன், சுகாதார வல்லுநர்களும் தனிமைப்படுத்தல் ஊரடங்களை நீடிக்க வேண்டும் என்றுவலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட் கிழமைக்குப் பின்னரும் நீடிக்கப்படுமா? இல்லையா? என்பது குறித்து இன்று வெள்ளிக் கிழமை தீர்மானிக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். (நி-5)

# ‘ஐவர்மெக்டின்’ கொரோனாவிற்கான மருந்தல்ல - நிபுணர் குழு அறிவிப்பு




(கொழும்பு)

கொவிட் தொற்றுக்கு இலக்கானவர்கள் ஐவர்மெக்டின் மருந்து பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என மக்களுக்கு அவசர அறிவிப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை நிபுணர்கள் தெரிவித்துள்ளதாக சுட்டிக்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொவிட்டை கட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும் சிலர் ஐவர்மெக்டினை பரிந்துரை செய்கின்றனர்.

ஆனால் இன்னமும் நாங்கள் இந்த மருந்தினை பரிந்துரைக்கவில்லை. ஐவர்மெக்டின் என்பது ஒட்டுண்ணி நோய் தொற்றுகளிற்கு சிகிச்சை அளிக்கின்ற மருந்து.

எனினும் கடந்த சில நாட்களில் மக்கள் அதிகளவில் இந்த மருந்தினை கொள்வனவு செய்வது குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த மருந்தினால் கொவிட்டை குணப்படுத்த முடியும் அல்லது தடுக்க முடியும் என ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்படும் வரை மக்கள் இந்த மருந்தினை தவிர்த்து கொள்ள வேண்டும் என நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

# அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சந்தையில் அத்தியாவசிய பொருட்களுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவவில்லை என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல தெரிவித்தார்.

சில அத்தியாவசிய பொருட்களுக்கு நேற்று முதல் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதிகபட்ச சில்லறை விலை பட்டியலுக்கு அனுமதியைப் பெற அவற்றை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சில விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அத்தியாவசிய பொருட்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கு குறிப்பிட்ட தரப்பினர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக் காட்டினார். (நி-5)

# கடைகள் மூடப்பட்ட நிலையிலும் மாதாந்த வரி அறவீடு

## வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

(முறிகண்டி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் சீரமைக்கப்படாத நிலையில் கொவிட் காலத்திலும் குத்தகைப்பணம் அறவீடு செய்யப்படுவதாக வர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தற்பொழுது கொவிட் பரவல் நிலை காணப்படும் சூழலில் மக்களின் வருகை மிக மிககுறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலையிலும் மாதாந்தம் 1000 ரூபாய் பிரதேச சபையால் அறவிடப்படுவதாக வர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடைகள் மூடப்பட்ட நிலையில் தமது வியாபார பொருட்களை பிராணிகள் அழித்து வருவதாகவும், பிரயாணிகள் வருகை தரும் போது கடைகளின் நிலை குறித்து கவலைகளை வெளிப்படுத்துவதாகவும் வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர். கொவிட் பரவல் காலத்திலும் தம்மிடம் குத்தகைப் பணம் பெறப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். தமது வர்த்தக செயற்பாடுகளிற்கு ஏற்ற வகையில் நிரந்தரக் கடைகளை அமைத்துத் தருமாறும், தற்கால சூழலில் வரி அறவீட்டை இடை நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (7-4-6-100)

## மரக்கறி வியாபாரம்

# பொலிஸாரை கண்டதும் தப்பியோடிய வியாபாரிகள்



(குப்பிழான்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட திருநெல்வேலிப் பகுதியில் தற்போதைய தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டத்திற்கு மத்தியிலும் சுகாதார நடைமுறைகளை மீறிவீதியில் மரக் கறி வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் கோப்பாய் பொலிஸாரின் வருகையைக் கண்ட வுடன் விற்பனை செய்த மரக் கறிகளையும் கைவிட்டுத் தப்பி யோடியுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை நடந்துள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சிவன் - அம்மன் வீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்துக்கு மத்தியிலும் காலை வேளையில் மரக்கறி வியாபாரிகள் ஒன்றுகூடி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடு வதால் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக அவ்விடத்தில் சனக்கூட்டம் அதிகம் கூடுவது அவதானிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் கோப்பாய்ப் பொலிஸார் அப்பகுதிப் பொது மக்களும் மரக்கறிகளைக் கொள் வனவு செய்வதற்குத் ஒன்று கூடுகின்றமை தொடர்பில் அறிந்து வாகனத்தில் நேற்றுக் காலை குறித்த பகுதிக்கு விரைந்துள்ளனர்.

பொலிஸார் வாகனத்தில் வருவதைக் கண்டவுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வியாபாரிகள் தாம் விற்பனை செய்வதற்காக கொண்டு வந்த மரக்கறி வகைகளையும் அங் கேயே கைவிட்டுத் தப்பியோடினர். (4-7-18)

# வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் தெரிவு ஒத்தி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் தெரிவுக்கு போதியளவு உறுப்பினர் எண்ணிக்கை இல்லாததால் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக் கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் தெரிவு அமர்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு நகர சபைக்குரிய மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது.

குறித்த அமர்வு கடுமையான சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டது.

இதன்போது நகரசபை உறுப்பினர்கள் ஐவர் மட்டுமே அமர்வில் பங்கேற்றனர்.

அதனால் அமர்வு 30 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அமர்வு ஆரம்பிக்கப் பட்டும் உறுப்பினர் எண்ணிக்கை குறைவால் திகதி குறிப் பிடப்படாமல் தவிசாளர் தெரிவு ஒத்திவைக்கப்பட்டது.(4-7-33-60)



தமிழர் விடுதலை கூட்ட ணியின் மானிப்பாய் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான வி.தர்மலிங்கத்தின் 36 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினை விடத்தில் நேற்று அஞ் சலி செலுத்தப்பட்டது.

(படம்:-சிவசுந்தன்.ரவிசாந்)



யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி கோவில் கஜவல்லிமஹாவல்லி உற்சவம் நேற்றுக் காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான தொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம் பெற்றுவரும் இறை ஆசிவேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம சுவாமி திருக்கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தியாக மயூரகிரிக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-6)




## இன்னருள் தரவே ஓடிவா

நல்லையில் வீற்றிருக்கும் நாதனே
தொல்லைகள் தீர்க்க ஓடிவா
உன்பாதம் அனுதினம் பணிந்தேன்
இன்னருள் தரவே ஓடிவா
தந்தைக்கு உபதேசித்த தனயனே
விந்தைமிகு உலகில் வந்த நோயினை
வினை தீர்க்கும் உந்தன் வேலினால்
வதம் செய்து வரம் தரவே ஓடிவா

வி.ரம்மியா
கல்வியங்காடு

## பசுமையான வாழ்வுதனை பூவுலகுக்கு அளித்திடய்யா

பாலகுமாரா நின் பன்னிரு விழிகளால்-இப்
பாரினில் பரிதவிக்கும் மக்களைப் பார்த்திடய்யா
பஞ்சம் இல்லா வாழ்வுதனை எமக்களித்து
பசுமையான வாழ்வுதனை பூவுலகுக்கு அளித்திடய்யா

சி.மகாலட்சுமி
கொக்குவில்

## இலட்சணத்தில் ஆண்டியானவன்

மாம்பழத் திருவிழா என்றுன்தன் உற்சவம்
மானிடர்க்கெல்லாம் அதுவொரு அற்புதம்
பார் உந்தன் கண்முன்னே வேறொன்றில்லை
நடமாடும் தெய்வங்கள் தான் உந்தன் எல்லை
அன்னை தந்தை உலகமென்ற தத்துவத்தை
அண்ணனுடன் கூடவந்து கற்பித்தாய்
தெட்சணத்தில் குடிகொண்ட பழனியாண்டவா
இலட்சணத்தில் ஆண்டியான எங்கள் வேலவா

சிவராஜா கிரிதரன்
ஓட்டுமடம் வீதி யாழ்ப்பாணம்.

## நமைக் காத்தருள்வாய் நல்லூரானே

ஆடிவருமயிலேறு ஆணழகா முருகா
நம் அவலங்கள் அடியொடு மண்ணிலே மறைய
கோடி முறையுனைப் பணிந்தோம் கோமகனே மருகா
கொண்ட வள்ளி தெய்வானையும்
உறையும் மணவாளா
பாடியுனைப் பணிந்தோம் பாலகனே வேலவனே
நாடியெமை வதைக்கும்
கொவிட்-19 ஐ வேரோடு
வேல்கொண்டழித்து
நம்மைக் காத்தருள்வாய்
நல்லூரில் வீற்றிருக்கும்
நாயகனே வேலவனே

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

# இலங்கை உள்ளிட்ட 3 நாடுகளில் கொரோனா மரணங்கள்

# 15 சதவீதத்தினால் அதிகரிப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம்

(கொழும்பு)

**இலங்கை உள்ளிட்ட மூன்று நாடுகளில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஒகஸ்ட் மாதத்தின் இறுதிப் பகுதியில் 15 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

தெற்காசிய வலயத்தில் கொரோனா மரண வீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வாராந்தம் வெளியிடப்படும் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொரோனா மரணங்கள் இலங்கையில் 19 வீதத்தி னாலும் இந்தியாவில்17 வீதத் தினாலும் திமோர்-லெசுடே யில் 32 வீதத்தினாலும் அதி கரித்துள்ளதாக குறித்த அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டு ள்ளது.

கடந்த வாரத்தில் மாத்தி ரம் தெற்காசிய பிராந்தியத்தில் 14 ஆயிரம் கொரோனா மர ணங்கள் பதிவாகியுள்ளன.

ஒப்பீட்டளவில் இது 20 வீத வீழ்ச்சி எனவும் கூறப்ப ட்டுள்ளது. (நி-5)

## சீனி, அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)

நாட்டில் பெருமளவான வியாபாரி கள் அப்பாவி மக்கள் மீது மோசடியாக மேற்கொண்டுவரும் அத்தியாவசிய பொருட்கள் மீதான விலை அதிகரிப் பைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அத்தி யாவசியப் பொருட்களின் மீது கட் டுப்பாட்டு விலையை விதிக்க அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

சீனி மற்றும் அரிசிக்கு உடன் அமு லுக்கு வரும் வகையில் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில், ஒரு கிலோ பொதி செய்யப்பட்ட சீனியை விற்பனை செய்யக்கூடிய அதிகபட்ச சில்லறை விலையாக 130 ரூபாயும் பொதி செய் யப்படாமல் விற்கப்படும் ஒரு கிலோ சீனி யின் அதிகபட்ச சில்லறை விலையாக 125 ரூபாயாகவும் பரிந்துரைக்கப்பட்டு ள்ளது.

அவ்வாறே, கீரிச் சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கு 136 ரூபாயும், ஒரு கிலோ வெள்ளை சம்பா அரிசிக்கு 101 ரூபாயும், ஒரு கிலோ வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசிக்கு அதிகபட்ச சில்லறை விலையாக 101 ரூபாயும் பரிந்து ரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெள்ளை (நாடு) அரிசி கிலோவொன்றின் அதிகபட்ச சில்லறை விலையாக 94 ரூபாயும் பரிந்து ரைக்கப்பட்டுள்ளது. இந்த விலைகள் நுகர்வோர் விவகார அமைச்சின் அனு மதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதி லும், இறுதி முடிவு இன்னும் எடுக்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டு ள்ளது. (நி-5)


கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியை
செல்வி சுஜாதா சுந்தரநாதன்
அவர்களுடைய அன்புத்தாயார்

அமரர்.வண்ணமயில்
சுந்தரநாதன்

பிறப்பு: 08.07.1942
இறப்பு: 21.08.2021

அவர்கள் 21.08.2021 அன்று இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/ கொண்டாவில் இந்துக் கல்லூரி.

[C-7607]


# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

### துன்பங்களைப் போக்கும் புரட்டாதி சனிக்கிழமை



அதனால் ஆத்திரம் அடைந்த பிருகு முனிவர், விஷ்ணுவின் மார்பு மீது தன் காலால் உதைத்து விட் டார்.

விஷ்ணு கோபப்படவில்லை. மாறாக வாஞ்சையுடன் பிருகு முனி வரின் காலை வருடினார்.

பிருகு முனிவரின் செயலால் ஆத் திரமடைந்த திருமகள், திருமாலின் செய்கையால் மேலும் ஆவேசம டைந்து அவரை பிரிந்து வைகுண் டத்தை விட்டு பூலோகம் வந்து விட்டாள். அங்கு கொல்வராமர் என்னும் ஊரில் தங்கினாள்.

திருமகளை விட்டுபிரிந்து இருக்க முடியாத மகாவிஷ்ணுவும், வைகுண் டத்தை விட்டு கீழே இறங்கி சேஷ லத்தை (திருமலை) தன் இருப்பிட மாக தேர்ந்தெடுத்துக் கொண்டார். இது விஷ்யோத்தர மஹாத்மியத்தில் உள்ள கதையாகும்.

திருப்பதி ஏழுமலையானுக்கு பிரம்மா முன்னின்று 10 நாட்கள் உற்சவம் நடத்தினார். இது பிரம் மோற்சவம்என அழைக்கப்பட்டது.

(தொடரும்)

# இந்தியப் பயணிகளால் இலங்கைக்கு ஆபத்து

## தென்னாபிரிக்க திரிபை அழைக்கிறது அரசு

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

இந்திய நாட்டுப் பயணிக ளுக்கு இலங்கை அரசாங் கம் சுற்றுலாக் கதவைத் திறந்திருப்பதன் ஊடாக தென் னாபிரிக்கா திரிபு உட்பட நான்காவது அலை இலங் கையில் பரவுகின்ற அபாயம் உள்ளதாக ஜே.வி.பி. தெரி வித்துள்ளது.

இந்தியாவிலும் அதிகள வில் கொரோனாத் தொற்று பரவிவருகின்ற நிலையில் இலங்கை அரசாங்கம் வேண் டுமென்றே கொரோனாத் தொற்றுக்கு அழைப்பிதழ் விடுத்திருப்பதாக ஜே.வி. பியின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரான மருத் துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகளை அழை த்துவருவதற்கு விளம்பரம் ஒன்றை அரசாங்கம் வெளி யிட்டுள்ளது.

அதாவது இரு இந்திய சுற்றுலாப் பயணிகள் இணை ந்து விமானச்சீட்டைப் பெற் றால் அவர்களுக்கு இலவச மாக இன்னுமொரு விமா னப் பயணச்சீட்டை வழங் கும் விளம்பரத்தை இல ங்கை அரசாங்கம் வெளியிட் டுள்ளது.

இவ்வாறு தான்தோன் றித்தனமான தீர்மானங் களை எடுத்து மீண்டும் ஒரு முறை கொரோனாத் தொற்று பரவுகின்ற நிலைமையை ஏற்படுத்தவா இலங்கை அரசாங்கம் முனைகின்றது? என அவர் கேள்வி எழுப்பி னார். (நி-5)

# மர்ம காய்ச்சலால் 45 குழந்தைகள் உயிரிழப்பு

(டில்லி)

**இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலம் ஃபிரோசாபாத் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலை போன்ற மர்ம காய்ச்சல் ஒன்று பரவி வருகிறது.**

இக்காய்ச்சலுக்கு கடந்த 10 நாட்களில் 45 குழந்தைகள் உட்பட 53 பேர் உயிரிழந்திருப்பதாக அந்த மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுவரை 186 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் மர்ம காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இதற்கென தனி வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மதுரா, ஆக்ரா மற்றும் ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் மர்ம காய்ச்சலால் 80 பேர் வரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (7-4)

# ஆப்கானில் கடந்த 20 ஆண்டுகளில் அமெரிக்க இராணுவம் எதையும் சாதிக்கவில்லை

## ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின்

(மாஸ்கோ)

ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக நிலைகொண்டிருந்த அமெரிக்க இராணுவம் எதையும் சாதிக்கவில்லை அது பூஜ்ஜியமாகவே உள்ளது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் படைகள் நாடு திரும்பியுள்ளது குறித்து புடின் கூறியதாவது,

கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்கா அந்நாட்டு மக்களை நாகரிகப்படுத்த முயன்றது.

அரசியல் ரீதியாகவும், சமூகரீதியாகவும் அந்நாட்டில் விதிகளைக் கொண்டு வரவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் முயன்றது. ஆனால், இதன் முடிவுகள் சோகமாகவே அமைந்துவிட்டது.

அமெரிக்காவுக்கு இழப்புகள் மட்டுமே மிஞ்சியது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா சாதித்தது பூஜ்ஜியமாக உள்ளது.

வெளியில் இருந்து ஒன்றைக் கொண்டு வருவது என்பது ஆப்கானிஸ்தானில் இயலாத காரியமாகவே உள்ளது என்று கூறியுள்ளார்.

ரஷ்யாவும் ஆப்கானிஸ்தானில் 10 ஆண்டுகளாக இராணுவத்தை நிலைநிறுத்தி விட்டு, 1989 ஆம் ஆண்டு படைகளைத் திரும்பப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.(7-4)

# சீனாவும் பாகிஸ்தானும் இருதரப்பு ஒத்துழைப்பையும் வலுப்படுத்த வேண்டும்

## சீனாவுக்கான பாகிஸ்தான் தூதர் தெரிவிப்பு

(பீஜிங்)

ஆப்கானிஸ்தானிலிருந்து செயற்படும் பல்வேறு பயங்கரவாத அமைப்புகளால் அச்சுறுத்தல் இருப்பதை பாகிஸ்தான் அறிந்துள்ளது. அமெரிக்கப் படைகள் வெளியேறியுள்ள நிலையில் உளவுத் தகவல் பரிமாற்றம், பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகளை சீனாவுடன் வலுப்படுத்துவோம் என சீனாவுக்கான பாகிஸ்தான் தூதர் மொயின் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

சீனாவின் அரசு செய்தி நிறுவனத்திடம் அவர் கூறியது,

பாகிஸ்தான் தலிபான்கள், ஐ.எஸ்., கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கம் மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து இயங்கும் பிற பயங்கரவாத அமைப்புகளிடமிருந்து அச்சுறுத்தல் இருப்பதை அறிந்துள்ளோம்.

அதிகரித்து வரும் சவால்கள், அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு பாகிஸ்தானும் சீனாவும் இருதரப்பு ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் வலுப்படுத்த வேண்டும்.

உளவுத் தகவல்களைப் பரிமாறுதல், முயற்சிகளை ஒருங்கிணைத்தல் உள்ளிட்டவற்றை தொடர்ந்து மேற்கொள்வோம் எனத் தெரிவித்துள்ளார்.

முதல்முறையாக தலிபான்களுடன் தூதரக ரீதியாகவும் சீனா தொடர்பு கொண்டது. ஆப்கானிலிருந்து செயற்படும் உய்கர் முஸ்லிம் இயக்கத்தினர் சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் வன்முறையில் ஈடுபடக் கூடும் என சீனா கவலை தெரிவித்துள்ளது.

அதற்கு அந்த இயக்கத்தினரை அனுமதிக்கக் கூடாது என தலிபான்களை சீனா வலியுறுத்தி வருகிறது. (7-4)

# இயற்கை பேரழிவுகளால் 2 மில்லியன் உயிரிழப்பு

(ஜெனிவா)

**கடந்த 50 ஆண்டுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் வெள்ளம் மற்றும் வெப்ப சலனம் போன்ற பேரழிவுகளின் எண்ணிக்கை ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது என ஐக்கிய நாடுகள் உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.**

**1979 முதல் 2019 ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட 11,000 இயற்கை பேரிடர்களை ஆய்வு செய்தே குறித்த அறிக்கை வெளியாகியுள்ளது.**

**இவற்றினால் 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளதோடு மொத்த இழப்புகளில் 3.64 ட்ரில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.**


**2 மில்லியன் இறப்புகளில் 91% இற்கும் அதிகமானவை வளரும் நாடுகளில் நிகழ்ந்துள்ளன என்றும் உலக வானிலை அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

**காலநிலை மாற்றத்தாலேயே மோசமான அளவு மழை வெள்ளம், வரட்சி, காட்டுத் தீ ஆகியவை ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (7-4)**

# காஷ்மீர் பிரிவினைவாதி கிலானி காலமானார்

(ஸ்ரீநகர்)

இந்திய காஷ்மீர் அரசியல்வாதியும், பிரிவினைவாதத் தலைவருமான சையத் அலி ஷா கிலானி (வயது-91) ஸ்ரீநகரில் நேற்று முன்தினம் காலமானார்.



அவர் அனைத்து கட்சிகள் ஹுரியத் மாநாட்டின் ஒரு கடுமையான பிரிவுக்கு தலைமை தாங்கினார். இது இந்திய ஆட்சியை நிராகரிக்கும் மற்றும் காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைக்க கோரும் பிரிவினைவாத கூட்டணி.

காஷ்மீருக்கு சிறப்பு உரிமை அளிக்கும் 370 ஆவது பிரிவு, 2019 ஆகஸ்ட் 5 இரத்து செய்யப்பட்ட பின்னர் கிலானி உடல்நலக் குறைவு காரணமாக அவரது வீட்டில் காவலில் வைக்கப்பட்டார்.

கிலானிக்கு பாகிஸ்தான் அரசு அந்நாட்டின் உயரிய குடிமைக் கௌரவ விருதான 'நிஷான் - எ- பாகிஸ்தான்' விருதை கடந்த ஆண்டு அளித்து கௌரவித்தது.

அவரது மரணம் அறிவிக்கப்பட்ட சில மணிநேரங்களில், ஸ்ரீநகர் மற்றும் பிற முக்கிய நகரங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நிறுத்தப்பட்டுள்ளனர், எந்த வாகனபோக்குவரத்தும் அனுமதிக்கப்படவில்லை. இப்பகுதி முழுவதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், தொலைபேசி, இணைய சேவைகள் முடக்கப்பட்டுள்ளன.(7-4)

# நாட்டு மக்களுக்கு 100 வீதம் செலுத்தும் வரை தடுப்பூசி ஏற்றுமதிக்கு வாய்ப்பில்லை

## இந்திய மத்திய அரசு

(டில்லி)

இந்தியாவில் உள்ள அனைவருக்கும் ஒரு டோஸ் தடுப்பூசியாவது செலுத்தி முடிக்கும் வரை தடுப்பூசியை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு இல்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா தடுப்பூசி ஏற்றுமதியை தடை செய்திருப்பதால் 91 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி வைத்தியர் சவுமியா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இது குறித்து கருத்து தெரிவித்துள்ள நோய்த் தடுப்புக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக்குழுவின் தலைவர் வைத்தியர் என்.கே.அரோரா,

நாட்டின் தற்போதைய கவனம் தனது சொந்த மக்களுக்கு தடுப்பூசி போடுவது எனத் தெரிவித்த அவர், குறைந்த பட்சம் வயது வந்தோர் அனைவருக்கும் ஒரு டோஸ் தடுப்பூசி போட்டு முடிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இரண்டாவது டோஸ் தடுப்பூசிக்கான கையிருப்பை ஆய்வு செய்ய வேண்டும் எனத் தெரிவித்த அவர், அதற்கு பிறகு தான் தடுப்பூசி ஏற்றுமதியை மீண்டும் தொடங்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (7-4)

# துப்பாக்கி முனையில் 73 மாணவர்கள் கடத்தல்

(அபுஜா)

நைஜீரியா நாட்டின் சாம்பாரா மாகாணத்தில் உள்ள ஒரு பள்ளியில் நேற்றுமுன்தினம் துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்த அடையாளம் தெரியாத நபரால் 73 மாணவர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள்.

இதுகுறித்து காவல்துறைசார்பில் பேசிய முகமது ஷுஹு, "மராதுன் பகுதியைச் சேர்ந்த கயா கிராமத்தில் அமைந்துள்ள மேல்நிலைப்பள்ளி ஒன்றில் துப்பாக்கியுடன் நுழைந்த மர்ம நபரால் அங்குள்ள 73 மாணவர்கள் கடத்தப்பட்டனர். இச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது" எனத் தெரிவித்தார்.

சமீப காலமாக முன் எப்போதும் இல்லாத அளவிற்கு நைஜீரியாவில் தொடர்ந்து தீவிரவாத தாக்குதல்களும் ஆள்கடத்தல்களும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (7-4)

# தலிபான்களின் புதிய அரசாங்கத்தில் உயர் பதவிகளில் பெண்களுக்கு இடமில்லை

(காபுல்)

ஆப்கானிஸ்தானில் விரைவில் புதிய அரசாங்கத்தை அமைக்கவுள்ள தலிபான்கள், புதிய அரசாங்கத்தில் உயர் பதவிகளில் பெண்களுக்கு இடமில்லை என தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, ஜனாதிபதி, பிரதமர் தவிர மற்ற அனைத்துப் பதவிகளிலும் பெண்கள் இருப்பார்கள் என்றும் நிறுவனத் தலைவர்களாக இருக்கலாம் என்றும் அப்போது தலிபான்கள் கூறியிருந்தார்கள்.

இன்னும் ஓரிரு நாட்களில் ஆப்கானிஸ்தானில் புதிய அரசாங்கம் அமையும் என்று கட்டாரில் உள்ள அந்த அமைப்பின் அரசியல் பிரிவு துணைத் தலைவர் அப்பாஸ் ஸ்டானேக்ஷா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், 'பெண்களுக்கு உயர் நிலையில் பொறுப்புகள் வழங்கப்படாது. கீழ் நிலைப் பதவிகளில் அவர்களுக்கு இடம் அளிக்கப்படும். கடந்த இரு தசாப்தங்களில் அரசாங்கத்தில் பணியாற்றியவர்கள் யாரும் தலிபான்களின் அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்' என கூறினார். (7-4)

### மன்னாரில்

## அதிகரிக்கும் மக்கள் நடமாட்டம் ஒற்றைக்கதவில் வியாபாரம்



(மன்னார்)

நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள நிலையில் மன்னார் மாவட்ட நகர் பகுதியில் மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வங்கி நடவடிக்கைகளும் இடம் பெறுகின்ற நிலையில் மக்களின் நடமாட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் கொரோனாத் தொற்று மற்றும் மரணங்கள் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் மக்கள் தொடர்ந்து ஊரடங்கு நிலையை மதிக்காது செயற்படுவதுடன் அனுமதி பெறாத பல வர்த்தக நிலையங்கள் மற்றும் மரக்கறி வியாபார நிலையங்கள் மக்களை அதிகளவில் ஒன்றுகூட்டி விற்பனை நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அதே நேரம் மன்னாரில் பல இடங்களின் உரிய அனுமதி இன்றி திருமண நிகழ்வுகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் இடம்பெறுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

(7-4-6-285)

## மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான வசதியினை உருவாக்குங்கள்

### கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவில் சடலங்களை எரியூட்டுவதற்கு மின்தகன வசதியினை ஏற்படுத்துங்கள் என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தான் மின்சாரம் மூலம் சடலங்களை எரியூட்டுவதற்கான வசதிகள் உள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான வசதிகளில்லை.

இந்நிலையில் முல்லைத்தீவில் மின்சாரம் மூலம் உடல்களை எரிப்பதற்கான வசதிகள் உருவாக்கப்படுமானால் பெருமளவு சிரமங்கள், அலைச்சல்கள் மக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ஏற்படாது. மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான வசதியினை பெற்றுத் தருவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் மின்சார மூலம் சடலங்களை எரிப்பதற்கான வசதி ஏற்படுத்த வேண்டியது இன்றைய காலகட்டத்தில் முக்கியமானது எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (7-4-6-350)

## இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(குருமபரம்)

கிளிநொச்சி ஊந்தபுரம் கிராமத்தில் உள்ளூர் இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஊந்தபுரம் காட்டுப்பகுதியில் குறித்த துப்பாக்கியுடன் வேட்டைக்கு சென்ற நிலையில் நேற்று முன்தினம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் துப்பாக்கி, உந்துருளி போன்றவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று கிளிநொச்சி நீதவான்நீதிமன்றில் முற்படுத்தினர்.

(7-4-6-316)

## கொரோனா பெருந்தொற்று காலத்தினை பேரிடர் காலமாக கருதி செயற்படுங்கள்

### மாக்லிஸ லெனினிசக் கட்சி கோரிக்கை

(குருமன்காடு)

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தினை பேரிடர் காலமாக கருத்தில்கொண்டு கட்டணமின்றி சடலங்களை எரியூட்ட நடவடிக்கை எடுக்குமாறு புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனினிச கட்சியின் வன்னி மாவட்டங்களின் செயலாளர் நி.பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த விடயம்தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் கொவிட் பெருந்தொற்றின் மூலம் அதிகளவு மரணங்கள் பதிவாகி வருகின்றன. அதன் ஒரு பகுதியாக வன்னி மாவட்டத்திலும் இறப்புக்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள நகரசபைக்குச் சொந்தமான எரிவாயு மயானத்தில் ஒரு சடலத்தினை எரியூட்டுவதற்கு 7 ஆயிரம் ரூபாய் அறவிடப்படுகின்றது. இது நிறுத்தப்பட்டு எதுவிதகட்டணமும் இன்றி சடலங்கள் எரியூட்டப்பட வேண்டும் என நாம் கோருகிறோம்.

இறப்பவர்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களாக இருப்பின் கிராம உத்தியோகத்தரால் அவர்களது வறுமை நிலை உறுதிப்படுத்திய சான்றிதழ் வழங்கும்பட்சத்தில் கட்டணமின்றி உடல்களை எரியூட்டமுடியும் என்று வவுனியா நகரசபை நிர்வாகம் கூறுகின்றது. இது மரத்தில் இருந்து விழ்ந்தவரை மாடு ஏறி மிதிப்பது போன்றதாகி விடும்.

எனவே, கொரோனாப் பெருந்தொற்று காலத்தினை தேசிய அனர்த்த பேரிடர் காலமாக கருத்தில் கொண்டு துயர் அடைந்திருக்கும் குடும்ப உறவுகளை மேலும் அசௌகரியங்களிற்கு உட்படுத்தாமல் எந்தவிதக் கட்டணமுமின்றி அந்தச் சடலங்களை எரியூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குறித்த விடயத்தில் மத்திய அரசு, மாகாண உள்ளூராட்சி சபைகள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர், சுகாதாரத் திணைக்களம் ஆகிய தரப்பினர்கள் ஒன்றிணைந்து உரியபொறிமுறை ஒன்றை உருவாக்கி அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கோருகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4-6-250)

## கால எல்லைக்குள் தகவலை வழங்காத நெற் களஞ்சியசாலைகளுக்கு சீல்

(நெளுக்குளம்)

வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் வவுனியா தாண்டிக்குளம் மற்றும் ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள இரண்டு தனியார் நெற்களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டது.

நாட்டிலுள்ள தனியார் நெற்களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் தொடர்பான தகவல்களை வழங்குமாறு அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் அரசினால் அறிவிக்கப்பட்ட கால எல்லைக்குள் குறித்த தகவல்களை வழங்காத இரண்டு நெற்களஞ்சியசாலைகள் வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்களால் சீல் வைக்கப்பட்டது.

இதேவேளை குறித்த களஞ்சியசாலைகளில் உள்ள நெல்லினை நெல் சந்தைப்படுத்தும் சபையால் நிர்ணய விலையினை செலுத்தி கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4-6-299)

## அரசாங்கம் அறிவித்திருந்தபோதும் வவுனியா சதொசவில் சீனி இல்லை



(குருமன்காடு)

சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் சீனியைப் பெறுவதற்காக சென்ற வவுனியா மக்கள் அங்கு சீனி இன்மையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் சிவப்பு சீனியை நேற்று முன்தினம் முதல் நாடளாவிய ரீதியில் 130 ரூபாய்க்கு பெற்றுக் கொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்தது.

இந்நிலையில் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய கொவிட் பரவலின் தீவிரத்தன்மை மற்றும் ஊரடங்குச் சட்டம் என்பவற்றுக்கு மத்தியில் சிவப்பு சீனியை 130 ரூபாய் விலையில் பெற்றுக் கொள்வதற்காக வவுனியாவின் பல்வேறு கிராமங்களிலும் இருந்து சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக்கள் வருகை தந்தனர்.

எனினும் குறித்த அரச விற்பனை நிலையங்களில் சீனி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து மக்கள் ஏமாற்றத்துடன் வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர். (7-4-6-250)

## தப்பியோடிய தொற்றாளர்கள்; கிராமத்தில் 32 பேருக்கு தொற்று

(நெளுக்குளம்)

வவுனியா தெற்கு சிங்கள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரே கிராமத்தினை சேர்ந்த 32 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

குறித்த கிராமத்தினை சேர்ந்த 3 பேர் சுகயீனம் காரணமாக வவுனியா மருத்துவமனைக்குச் சென்றனர்.

அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

ஆயினும் குறித்த நபர்கள் தப்பிச்சென்றிருந்தனர். இது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்த சுகாதாரப் பிரிவினர் குறித்த கிராமத்தில் தேடுதல் நடத்தி ஏழு நபர்களை தனிமைப்படுத்தியிருந்தனர்.

எனினும் தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் அதனை கடைப்பிடிக்காமையினால் குறித்த பகுதியைச் சேர்ந்த 150 பேரிடம் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதில் 32 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(7-4-6-299)

# வவுனியா வைத்தியசாலையில்

# தொற்றாளர் தொகை அதிகரிப்பு

# மூன்றாவது விடுதியும் திறப்பு

## வவு.வைத்தியசாலை பணிப்பாளர் எச்சரிக்கை

(நெளுக்குளம்)

**வவுனியா வைத்தியசாலையில் கொரோனா தொற்றாளர்களாக அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து செல்வதால் மூன்றாவது விடுதியும் திறக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவ கலாநிதி க. ராகுலன் தெரிவித்துள்ளார்.**

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் (Quarantine Curfew) அமுலில் உள்ளபோதும், மக்கள் தமது நடமாட்டங்களை குறைத்துக்கொள்வதுடன், சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றாவிடின் நிலைமை கைமீறிப்போகும் நிலை ஏற்படலாம் எனவும் எச்சரித்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவரிடம் கேட்டபோது இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வவுனியா வைத்தியசாலையில் அறிகுறிகளுடன் கூடிய கொரோனா நோயாளர்களை பராமரிப்பதற்காக 100 படுக்கைகளை கொண்ட 3 விடுதிகளும், 15 படுக்கைகளை கொண்ட கர்ப்பிணி தாய்மாருக்கான விசேட விடுதியும், 6 படுக்கைகளை கொண்ட அதி தீவிர சிகிச்சை பிரிவும், 2 படுக்கைகளை கொண்ட சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு பிரிவுமாக 120 இற்கும் அதிகமான படுக்கைகளை கொண்ட நோயாளர் பராமரிப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இது எமது வைத்தியசாலையின் ஆளணி மற்றும் ஏனைய காரணிகள், வளங்களை பொறுத்தவரையில் மிக அதிகளவாகும் என தெரிவித்தார். கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 50 வரையான கொரோனா மரணங்கள் வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நிலையில், வைத்தியசாலை கட்டில்களை அதிகரிப்பதோ, உயிர்சுவாச கருவிகளை தருவிப்பதோ மாத்திரம் மாவட்டத்தின் தொற்றுநிலையை கட்டுப்படுத்திவிடாது. மாறாக, மக்களின் அதியுச்ச பங்களிப்பே பிராந்தியத்தின் தொற்று நிலையை கட்டுக்குள் கொண்டு வர அத்தியாவசியமானதென குறிப்பிட்டார்.

வவுனியா வைத்தியசாலையில் மூன்றாவது விடுதியும் தற்போது செயற்படத்தொடங்கியுள்ளமை, தினமும் அதிகரித்து வரும் தொற்றாளர்களினால் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதையே உணர்த்தி நிற்கின்றது.வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை, பிராந்தியத்தின் ஓரேயொரு அறிகுறிகளுடன் கூடிய கொரோனா நோயாளர்களுக்கான சிகிச்சை நிலையமாக உள்ளதுடன், வைத்தியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களும் தற்போது கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி வருவதனால், கொரோனா நோயாளர் பராமரிப்புடன், சுகாதார தரப்பினரின் பாதுகாப்பு, கொரோனா அல்லாத பிற நோயாளர்களுக்கான முறையான சிகிச்சை வழங்கல் என்பன வவுனியா வைத்தியசாலை நிர்வாகத்திற்கு கடும் சவாலை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-299)

# கொரோனாவால்

# வீடுகளில் மரணிப்போர் தொகை அதிகரிப்பு

## தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் வேகமும் அதே போன்று மரணிப்பவர்களின் வேகமும் நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது. இவ்வாறு கொரோனா தொற்றாளர்கள் அதிகரிப்பால் அரச வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனையடுத்து கொரோனா நோயாளிகள் அவர்களது வீடு களில் வைத்து சிகிச்சையளிக்கப் படுகிறார்கள்.

இவ்வாறு வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கப்படும் நோயாளர்கள் உயிரிழக்கும் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

கடந்த 27 ஆம் திகதியுடன் முடிவுக்குவந்த வாரத்தில் 194 பேர் வீடுகளில் உயிரிழந்ததாக புதிய அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மொத்த கொரோனா உயிரிழப்புகளில் 76.6 வீதமாக இது பதிவாகியுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தில் கொவிட் தொற்றுக்குள்ளாகி 99 பெண்களும் 95 ஆண்களும் வீடுகளில் உயிரிழந்துள்ளனர்.

இதுவரை மொத்தமாக 1,094 பேர் வீடுகளில் உயிரிழந்திருக்கின்றனர். மொத்த மரணங்களில் 13.1 வீதம் வீடுகளில் இடம்பெற்றுள்ளன என தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# துறைமுக நகரத்தில்

# கால் பதிக்கிறது சீன வங்கி



(கொழும்பு)

கொழும்பு துறைமுக நக ரத்தில் சீன அபிவிருத்திவங்கியின் பிராந்திய தலை மையகத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் அனைத்து வசதிகளையும் வழங்க தயாராக இருப்பதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்து ள்ளார்.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளுக்கு சீனாவின் ஆதரவையும் அவர் நாடி யுள்ளார். நேற்று முன்தினம் ஸூம் தொழில்நுட்பம் ஊடாக சீன மக்கள் காங்கிரஸின் (சீன பாராளுமன்றத்தின் சபாநாயகர்) லீ ஷாங்க்சுவின் உட்பட நிலைக்குழுத் தலைவர்களுடனான சந்திப்பில் அவர் மேற்கண்ட உறுதிமொழியை அளித்தார். (நி-5)

# இணையத்தில் இடம்பிடித்த

# தமிழ் எம்.பி



(கொழும்பு)

பாராளுமன்றில் சிறப்பாக செயற்பட்டு முதலிடத்தினை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் வசப்படுத்திக்கொண்டு ள்ளார்.

அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாண க்கியன் முதலிடத்தைப் பிடி த்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சிறப் பாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தரவரிசையினை மந்திரிஎல்கேஎன்ற இணையத்தளம் வெளி யிட்டு வருகின்றது.

இந்தநிலையில் தற்போது புதிய தரப்படுத்தல் பட்டியலினை குறித்த இணையத்தளம் வெளி யிட்டுள்ளது. புதிய தரப்படுத்தலிலேயே இரா.சாணக்கியன் முதல் இடத்தினை பிடித்துள்ள துடன், அமைச்சர் சரத் வீரசேகர இரண்டாவது இடத்தினையும், புத்திக பத்திரன மூன்றாவது இடத்தினையும் பிடித்துள்ளனர். (நி-5)

## பேரா. லக்ஷ்மன் ஜயதிலக கொரோனாவால் மரணம்



(கொழும்பு)

பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக, கொவிட் தொற்று காரணமாக நேற்று முன்தினம் காலமானார்.பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக இலங்கையின் கல்வி சீர்திருத்தத்தில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்களை அறிமுகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# அம்பலவன்பொக்கணையில் 2 ஆவது தடுப்பூசியினையும் வழங்குங்கள்

## கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைபற்று அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயத்தில் 2ஆவது தடுப்பூசியினை வழங்குவதற்கு சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் இ.ஹஜிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

சுகாதார துறையினர் 06.08.2021 அன்று வருகை தந்து அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலத்தில் முதலாவது தடுப்பூசியினை வழங்கியிருந்தார்கள். அதே போல இரண்டாவது தடுப்பூசியினையும் அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலத்தில் வைத்து ஏற்றுமாறு கிராம மக்கள் என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனவே சுகாதார துறை அதிகாரிகள் குறித்த விடயத்தை கவனத்தில் எடுத்து மக்களின் கோரிக்கையை பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குறித்த பிரதேசத்தில் செம்மண்குன்று, புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய கிராமங்களில் ஏறத்தாழ 450குடும்பங்களிற்கு மேல் மக்கள் வசிக்கின்றனர் என பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.(7-4-6-350)

# சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காவிட்டால் நாட்டை முடக்குவது அர்த்தமற்றது

## ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டை முடக்குவதன் மூலம் மட்டும் கொரோனா தொற்றுநோயை சமாளிக்க முடியாது, மக்களின் ஒத்துழைப்பு மற்றும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பது முக்கியமானது என சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதை குறிப்பிட்டார்.

இதேவேளை, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டாலும் பயணக் கட்டுப்பாடுகள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

மேலும், "நாட்டை முடக்குவதன் மூலம் மட்டுமே இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது. வைரஸ் பரப்புவதைக் கட்டுப்படுத்தும் ஒரு வழியாகவே ஊரடங்கு உதவும்.

மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் நாட்டை முடக்குவது அர்த்தமற்றது. நாடு முடக்கப்பட்ட போதிலும் வீதியில் எத்தனை வாகனங் கள் உள்ளன என்பதை நீங்கள் பார்க்கலாம்.

இதேவேளை, கட்டுப்பாட்டை நீக்கிய பிறகு, போக்குவரத்து, வணிக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் மக்கள் கூடுவதை அதிகாரிகள் தடுக்க வேண்டும்.

"தற்போதைய முடக்கல் நிலையை நீக்கிய பின் கண்டிப்பாக பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது மற்றும் தனிப்பட்ட பயணங்கள் வைபவங்களை கட்டுப்படுத்துவது மிகவும் அவசியம்.

போக்குவரத்து, வர்த்தக மையங்கள் மற்றும் பொது இடங்களில் மக்கள் திரள்வதைத் தடுக்க முன் கூட்டியே திட்டங்களை வகுக்க வேண்டும்.

அத்தகைய திட்டங்கள் இல்லாமல், மக்களையோ சுகாதாரத் துறையையோ குற்றம் சொல்ல வேண்டாம் என்றும் மருத்துவர் தெரிவித்தார். (நி-5)



வலிந்து காணமலாக்கப்பட்ட தமிழர் உறவுகளுக்கு நீதிவேண்டி ஐ.நா மனித உரிமைச்சாசன முன்வரைவு எழுதப்பட்ட பரிஸ்-மனித உரிமைச் சதுக்கத்தில் கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெற்றது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தமிழீழ மக்கள் பேரவை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வானது, ஓகஸ்ட்-30 வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளில் இடம்பெற்றிருந்தது.

# மூன்று வேளை உணவை அல்ல ; ஒரு வேளை உணவையே மக்கள் கேட்கின்றனர்

(கொழும்பு)

கொரோனாத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை முன்னேற்றவும் பல ஜனாதிபதி செயலணிகள் உள்ளன. ஆனால், ஒன்றாலும் பயனில்லை. கொரோனா பரவலை தேசிய பிரச்சினையாகக் கருதி சர்வகட்சி மாநாட்டை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கிறேன் என அபயராம விகாராயின் விகாராதிபதிமுருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்றபோது நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். இன்று அந்தமகிழ்ச்சிதவறானது என உணரப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறியதாவது

அரசியல் மட்டத்தில் முரண்பட்டுக் கொள்ளும் தருணம் இதுவல்ல. ஆகவே, தற்போதைய நிலையை ஒரு தேசிய பிரச்சினையாகக் கருதி செயற்பட்டால் மாத்திரமே தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். சுகாதார அமைச்சு பலவீனமடைந்துள்ளது.

சுகாதார அமைச்சில் உள்ள குறைபாடுகளுக்குத் தீர்வு காணாமல் சிறந்த சுகாதார சேவையை எதிர்பார்க்க முடியாது.

செல்வத்தை வழங்குமாறு மக்கள் கோரவில்லை. உயிர்வாழ பாதுகாப்பு சூழலை ஏற்படுத்துமாறும், மூன்று வேளை உணவு அல்ல ஒரு வேளைஉணவையாவது பெற்றுக் கொள்வதற்கான சூழலையே மக்கள் கேட்கிறார்கள்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. சீனியின் விலை என்றும் இல்லாத அளவுக்கு உயர்வடைந்துள்ளது. இதற்கு யார் பொறுப்புக் கூறுவது?

அத்தியாவசியப் பொருட்களின் விலை இன்னும் எந்தளவுக்கு அதிகரிக்கப்படும் என்பதை குறிப்பிட முடியாது" என அவர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மிருக உளவியல்

பதவிக்காக சண்டை போட்டுக் கொள்ளுவதற்கு மிருகங்களிடமும் உண்டு. இதை ஏதோ விளையாட்டுக்காக சொல்லவில்லை. உளவியல் அறிஞர்கள், உயிரியல் அறிஞர்கள். இவர்கள் எல்லாம் ஆராய்ச்சிசெய்து பார்த்துவிட்டு சொல்லும் உண்மை இது!

கார்ப்பெண்டர் என்ற ஒரு உளவியல் நிபுணர் 1938 இல் இவர் இந்தியாவிலேயிருந்து நிறைய குரங்குகளை பிடித்து கப்பலிலே ஏற்றி சாண்டியாகோ என்கிற தீவிலே கொண்டு போய் விட்டார். என்ன ஆனது தெரியுமா? உடனே அது எல்லாம் மரங்களிலே ஏறிக்கொண்டு சண்டை போட ஆரம்பித்தது.

கடைசியிலே ஒரு ஆண் குரங்கு மற்றைய குரங்குகளையெல்லாம் ஜெயித்து விட்டு தலைமைப் பதவியைப் ஏற்றுக்கொண்டது. அதற்கு அப்புறம் மற்றைய குரங்குகள் எல்லாம் அதற்கு கீழ்பட்ட இடங்களிலே இருந்து கொண்டது. பெண் குரங்குகள் எல்லாம் குட்டிகளை கவனிக்க ஆரம்பித்து விட்டது. கூட்டத்திலே ஒரு ஒழுங்கு நிலைமை அப்புறம் தான் வந்தது. வயசான குரங்கு வலுவில்லாத குரங்கு இதற்கெல்லாம் மற்யை குரங்கு உதவி கூட செய்ய ஆரம்பித்து விட்டது.

மாட்டு மந்தையிலே கூட இது மாதிரி ஆவது உண்டு. திடீர் என்று இரண்டு மாடு ஒன்றை ஒன்று முட்டிக்கொள்ளும். மாடு மேய்க்கிறவர்கள் அதை கண்டு கொள்ள மாட்டார்கள். அப்படியே விட்டுவிடுவார்கள்.

ஒரு மாடு மற்றையதை முட்டித் தள்ள அந்த கூட்டத்திற்கு தான் தலைவன் என்பதை நிலைநாட்டின பிறகு மந்தையிலே அமைதி வந்துவிடும். பிறகு அது பாட்டுக்கு மேய்ந்து கொண்டு இருக்கும்.

ஜான் பால் ஸ்காட் என்று ஒரு உளவியல் பேராசிரியர் சுண்டெலிகள் சண்டை போட்டுக்கொண்டு இருக்கும் போது வால் ஒரு முக்கிய அம்சம் என்று கண்டுபிடித்தார். ஒரு ஆண் சுண்டெலியின் வாலை லேசாக கிள்ளினார். அது உடனே சீறிக் கொண்டு பக்கத்தில் இருக்கின்ற சுண்டெலியைக் கடிக்க ஆரம்பித்து விட்டது.

பல வன விலங்குகள் தனது மனதிற்குள்ளே ஒரு ஆதிக்க எல்லையை நிர்ணயம் செய்து கொள்ளும். அந்த எல்லைக்குள்ளே யாராவது அத்துமீறி வந்துவிட்டால் இரண்டிலே ஒன்று முடிவு செய்யும். அதாவது நின்று சண்டை போடுவதா? இல்லை ஓடிப்போறதா? இப்படி தீர்மானம் செய்ய வேண்டிய கட்டாயம் அதற்கு ஏற்படும்.

ஒரு காட்டுப் பூனையை ஒரு சின்னக் கூண்டுக்குள்ளே அடைத்தார்கள். அதை வேடிக்கைப் பார்ப்பதற்காக கூண்டை நெருங்குகின்ற எல்லோருமே அதனுடைய ஆதிக்க எல்லைக்குள் அத்துமீறி வந்துவிட்டதாக நினைக்கும். சண்டை போடவும் முடியாமல் ஓடிப்போகவும் முடியாமல் தவித்து அந்தக் காட்டுப் பூனை சிறிது நாளிலே பைத்தியம் பிடித்துவிடும்.

மிருகக்காட்சிசாலை எல்லாம் கூண்டுகள் அமைக்கும் போது கவனித்துத் தான் கட்டுவார்கள். புலி இல்லை என்றால் கரடி நம்மை பார்த்து விட்டு மூலையிலே ஒரு ஒதுங்கிக்கொள்ளும் என்றால் என்ன அர்த்தம்? அதனுடைய ஆதிக்க எல்லைக்குள் நாம் போய் இருக்கின்றோம் என்று அர்த்தம். அதனுடைய எரிச்சலை தீர்த்துக்கிறதுக்கு தான் அப்படி செய்கிறது. மனிதர்கள் கோபம் வந்தால் எப்படி இருப்பார்கள் என்று நமக்கு தெரியும்.

பிராணிகளுக்கு கோபம் வந்தால் என்ன செய்யும் தெரியுமா? பறவைகள் எல்லாம் பாட்டு பாட ஆரம்பித்து விடும். தவளையெல்லாம் அத்துமீறி வந்திட்டா தவளையினுடைய முதுகுலே எம்பிஎம்பி குதித்து அழுத்தும். ஆட்டுக்கிடா தலையை தாழ்த்தி ஆட்டும்.

வீட்டிலே பூனை, நாய் இதையெல்லாம் பிரியமாத்தான் வளர்க்கிறோம். அதற்கெல்லாம் கோபம் வந்தா என்ன செய்யும் என்று தெரியுமா? அதனிடம் மாட்டிக்கொண்டால் கடி படுகிறவர்கள் உண்டு. உங்கள் வீட்டு நாய் சாதுவாக இருக்கலாம். உங்கள் மேலே விழுந்துகூட விளையாடலாம். ஆனால் அதற்கு தெரியாமல் பின்பக்கமாக போய் அது தோளிலே திடீர் என்று கையை வையுங்கள். லவ்ளு என்று திரும்பி விழுந்து கடித்திடும்.

அதனுடைய பரம்பரை குணம் அப்படி! பின் பக்கமாக சத்தம் போடாமல் வருகிறது முதுகிலே கையை வைக்கிறது தன்னுடைய தலையை விட உயரமான தலை இவைகளெல்லாம் எதிரிகளுடைய பண்பு என்று அது உள்ளுணர்விலே பதிந்து விடும். அதனாலே நம்முடைய வீட்டிலே நாய் தான் என்று சொல்லிட்டு அதனிடம் கண்ணாமூச்சி விளையாட்டு எல்லாம் விளையாடதீர்கள். அது பெயரை சொல்லி கூப்பிட்டுக்கொண்டு அதனிடம் போங்கள். வருகிறது யார் என்று அது தெரிந்து கொள்ளும். அதற்குப்பிறகு கொஞ்சலாம்.

ஒரு மிருகத்துக்கு கோபம் வந்துவிட்டு என்றால் என்ன ஆகும் தெரியுமா? அதனுடைய தசைக்குள்ளே இரத்தம் அதிகமாகும். இதயம் படபடக்கும் அட்ரீனலின் பாயும் உடனே முடிவு செய்யும். எதிர்த்து தீவிரமாக சண்டை போடுகிறது இல்லை என்றால் தலை தெறிக் ஓடிப்போகும். இது இரண்டிலே ஒன்று செய்ததிற்கு பிறகு தான் அது சாந்தமாகும்.

அப்படி இரண்டிலே ஒன்று செய்யவில்லை என்றால் அதற்கு மனக் கோளாறு வந்துவிடும். மனிதனும் அப்படி தான்.

உணர்ச்சிகளை அடக்கினால் இரத்த அழுத்தம், வயிற்றுப்புண், ஆஸ்துமா எல்லாம் வந்துவிடும். ஒரு சவடால் பேர் வழி "என்னுடைய எதிரியை ரொம்ப வேகமாக ஓட வைத்து விட்டேன் தெரியுமா?" என்று பெருமையாக சொன்னான். அது எப்படி என்று கேட்டார்கள். "அவனுக்கு பயந்து கொண்டு நான் ஓடி வந்தேன்!" என்று அதற்கு விளக்கம் கொடுத்தான். அந்த ஆள்.



# சிறுவர் அரங்கம்

## இரண்டு சீடர்கள்



"அவனுக்கு சந்துருவைப் போல அவ்வளவு புகழ் இல்லை. அவனுக்குச் சீடர்களும் மிகக் குறைவே. அவன் அவ்வப்போது மக்களை நல்வழிப்படுத்த சொற்பொழிவுகள் ஆற்றி அறிவுரை கூறுகிறான்.

"அவனது பேச்சைக் கேட்க ஆவலுடன் மக்கள் கூடுகின்றனர். அவனது அறிவுரையைக் கேட்டு பலர் திருந்தியும் உள்ளனர். அவனுக்கு மக்களிடையே உயரிய மதிப்பு உள்ளது. ஆனால், அவனிடம் அரிய சக்திகள் உள்ளனவா என்று யாருக்கும் தெரியாது" என்றான்.

"எனக்கு இருவரில் மகிமைதாசனையே பிடிக்கும். அவனே இந்த ராஜகுருப் பதவிக்கு ஏற்றவன்" என்றார்.

மன்னனும் குருவின் யோசனையை ஏற்று மகிமைதாசனையே ராஜகுருவாக அமர்த்தி கொண்டான்.

சந்துருவுக்கு தான் சாபத்தை விலக்கும் முறையைக் கற்பித்தார். மகிமைதாசனால் கற்க முடியாது என்று கூறி ஊருக்கு அனுப்பிவிட்டார். ஆனால், ராஜகுருவை நியமிக்கும் விடயத்தில் மகிமைதாசனையே அப்பதவியில் அமர்த்தும்படி கூறினார்.

இதன் காரணம் என்ன என்று சொல்லுங்கள் பார்ப்போம்.

"உலகில் சிலர் புகழ் பெற விரும்புகின்றனர். வேறு சிலர் அடக்கமாக இருக்கின்றனர். சந்துரு முதல் ரகத்தைச் சேர்ந்தவன். மகிமைதாசன் அடக்கமாக இருந்து தன் சக்தியை வெளிச்சம் போட்டுக் காட்டாமல் இருந்தான். சந்துருவைக் கண்டு மக்கள் பயப்பட்டனர். மகிமைதாசனை விரும்பி அவன் சொல்வதைக் கேட்கக் கூடினர்.

"ஒருவன் கோபம் கொண்டாலே சாபம் கொடுப்பான். பிறகு அதை விலக்குவான். இதனால் கோபம் கொள்பவன் சந்துரு. சாபம் விலக்கத் தெரியாததால் மகிமைதாசன் கோபமே கொள்ளாமல் அமைதியுடன் வாழ்ந்தான். இவற்றை எல்லாம் சீர் தூக்கிப் பார்த்தே அவர் மகிமைதாசனை அப்பதவியில் அமர்த்தும்படி கூறினார். அவரது போக்கிலும் முரண்பாடில்லை.

சந்துருவுக்கு சாபத்தை விலக்கும் முறையைச் சொல்லிக் கொடுத்தது அவனால் பிறருக்குக் கெடுதல் ஏற்பட்டாலும் அதை விலக்கி நன்மை புரிய வேண்டும் என்பதற்காகத்தான்.

மகிமைதாசனால் அவ்வித ஆபத்து ஏற்படாது என உணர்ந்தே அவர் அவனுக்கு அந்த முறையைக் கற்பிக்கவில்லை" எனக் கூறினான்.

(முற்றும்)

# மகாபாரதம்




குடிமக்களைக் காக்க வேண்டி அவர்களிடம் இருந்து ஆறில் ஒரு பங்கு வரிவசூல் செய்ய வேண்டும். குடிமக்களைத் தான் பெற்ற மக்களைப்போல் கருத வேண்டும். நீதி செலுத்துகையில் நண்பன் என்று பார்க்கக் கூடாது.

நேர்மையும், நடுவு நிலை தவறாமையும் உள்ளவர்களை நீதிபதிகளாக அமர்த்த வேண்டும். இந்தக் குணங்கள் யாவும் மன்னனிடத்தில் எப்போதும் குடிகொண்டிருக்க வேண்டும்.

பலதுறை வல்லுநர்களை அரசன் எப்போதும் கலந்தாலோசிக்க வேண்டும். தங்கம், இரத்தினம் ஆகியவற்றை எடுக்கும் இடங்களிலும், உப்பளத்திலும், சுங்கச்சாவடிகளிலும், யானைக் கூட்டம் உள்ள இடத்திலும், அமைச்சர்கள் அல்லது நம்பிக்கை உள்ளவர்களை நியமிக்க வேண்டும்.

எப்போதும் தண்டநீதி செலுத்தும் அரசனைத் தருமம் வந்தடையும். தண்டநீதி என்பது அரசனுக்கு உத்தம தருமமாகும். அரசன் பகைவரிடத்து எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். அவர்கள் வரக்கூடிய பாலங்களை உடைக்க வேண்டும். வழியை அடைக்க வேண்டும்.

வெகு தொலைவில் இருந்து வரும் பகைப் படைகளைக் கண்காணிப்பதற்குப் புற மதில்களில் அமைக்கப்பட்டுள்ள பிரகண்டி என்னும் இடங்களையும் மதில்மீது இருந்து அதைப் பற்றவரும் பகைப்படை மீது அம்பு செலுத்தும் "அகாசஜநநீ" என்னும் இடங்களையும் நன்கு பாதுகாக்க வேண்டும்.

நால்வகைப் படைகளைப் பற்றிய இரகசியங்களைப் பகைவர் அறியாதவாறு பாதுகாக்க வேண்டும். ஏராளமான முதலைகளும், திமிங்கலங்களும் அகழியில் இருக்குமாறு செய்ய வேண்டும்.

நாடெங்கும் கிணறுகளை வெட்ட வேண்டும். முன்னோர்களால் வெட்டப்பட்ட கிணறுகளைச் சுத்தம் செய்ய வேண்டும். கற்களாலும், செங்கற்களாலும் வீடுகளை அமைக்க வேண்டும். தேவையான இடங்களில் தண்ணீர்ச் சாலைகளையும் கடைகளையும் ஏற்படுத்த வேண்டும். (தொடரும்)

மனிதனுக்குள் இருக்கும் தெய்வத்தை உணர்ந்து வாழ்வதுதான் நமது இலட்சியம்.
- ஜெயகாந்தன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழக மீனவச் சகோதரர்களுக்கு ஓர் அவசர மடல்

என்றும்எம் தமிழகத்து மீனவச் சகோதரர்களுக்கு அன்பு வணக்கம்.

தமிழகம் ஈழத் தமிழர்களின் தாய்மடி. எங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களின் போதெல்லாம்தமிழகம் துடிதுடித்துப் போனது.

எங்களின் பேரவலம் கண்டு சகோதரன் முத்துக்குமாரன் தன் உடலை எரியூட்டிய தியாகம் மறத்தற்குரியதோ?

சகோதரன் முத்துக்குமாரன் போல் எத்தனை சகோதரர்கள் எங்களுக்காக தம் உயிர்த்தியாகம் செய்தனர்.

இவற்றையெல்லாம் ஈழத் தமிழ் மக்களாகிய நாம் ஒருபோதும் மறந்துவிடமாட்டோம்.

இப்போதுகூட தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க தமிழக முதல்வர் மு.க. ஸ்ராலின் நடவடிக்கை எடுப்பதான செய்தி எங்கள்மீது தமிழகம் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாகும்.

இவ்வாறாக தமிழகம் எங்கள்மீது அன்று முதல் இன்றுவரை கொண்டுள்ள பற்றுக்கும் பாசத்துக்கும் எல்லை ஏது?

தவிர, சொந்த நாட்டில் ஆட்சியாளர்களால் நாம் வஞ்சிக்கப்படும்போதெல்லாம் எங்கள் தமிழகத்துச் சகோதரர்கள் இருக்கின்றார்கள் என்ற ஒரே நம்பிக்கை மட்டுமே எங்களுக்கான கொழுகொம்பாயிற்று.

இவ்வாறாக இருக்கையில், தமிழகத்து மீனவச் சகோதரர்கள் கடல் எல்லை தாண்டி வருவதும் எங்கள் மீனவச் சகோதரர்களின் வலைகள் அறுபட்டுப் போவதுமான செய்திகள் மிகுந்த வேதனையைத் தருகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளால் எங்கள் ஈழத்து மீனவர்கள் நஷ்டங்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்கின்றனர் என்பதை நீங்கள் அறியாமல் இருக்க மாட்டீர்கள் என நம்புகின்றோம்.

அதிலும் வடபுலத்தில் கொரோனாத் தொற்றுத் தீவிரமாகப் பரவி வருகின்ற இவ்வேளையில், மக்களின் பொருளாதாரம் மிக மோசமாகிக் கொண்டிருக்கையில், மீன்பிடித் தொழிலை மட்டுமே தமது சீவனோபாயத்துக்காக பயன்படுத்துகையில், அவர்களின் மூலதனமான வலைகள் சேதமாக்கப்படும் போது, அவர்களின் நிலைமை எவ்வாறாக இருக்கும் என்பதை சக மீனவச் சகோதரர்கள் என்ற அடிப்படையிலேனும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

தவிர, எங்களுக்குள் நடக்கின்ற இந்த மனக் கசப்புக்கள் எங்கள் தமிழ் இனத்தின் உறவில் தாக்கத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற ஏக்கம் சதா எங்களை வாட்டுகிறது.

தமிழகத்து மக்களின் உறவு ஒன்றுதான் எங்களின் பலமாக இருக்கையில், அதற்கும் பங்கம் நேர்ந்துவிடுமோ என்ற பதகளிப்பு ஏற்படுவது நியாயமானதே.

எனவே அன்புக்குரிய தமிழகத்து மீனவச் சகோதரர்களே! நீங்களும் நாங்களும் வேறல்லர். எங்களின் சகோதரத்துவம் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

நீங்களும் நாங்களும் முரண்பட்டால் அது எங்களின் எதிரிகளுக்கு சாதகமாகப் போகும்.

ஆகவே கடல் எல்லை விடயத்தில் நம் இரு தரப்பும் தமிழ் இனத்தின் பேரால் சட்டவரையறைகளைக் கடுமையாகப் பின்பற்றுவோம்.

யாருக்கும் யாரும் கெடுதி செய்யாமல் அவரவர் எல்லைகளுக்குள் நின்று தொழில் செய்வோம். இதற்கு உங்களின் மேலான ஒத்துழைப்பைத் தந்துதவுங்கள் என அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

## உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகளே இலங்கையிலும் உள்ளது

### பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க

(கொழும்பு)

தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள முடக்கக் கட்டுப்பாடுகள் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தனித்துவமான முடக்க கட்டுப்பாடுகளுடன் நாடு மூடப்பட்டாலும் பொருளாதார ரீதியாக முக்கியமான பல துறைகள் தொடர்ந்து செயற்பட முடிந்துள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட சில நாடுகள் முடக்கத்தை அமுல்படுத்தினாலும், அவர்களால் கோவிட் தொற்று பரவுவதைத் தடுக்க முடியவில்லை.

பொருளாதாரம் சரிவடையாமல், நாடு முன்னேற வேண்டும். கடந்தஐந்து ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தைகருத்தில்கொண்டு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் பொதுப் போக்குவரத்தினை மீள ஆரம்பிக்க திட்டம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், பொதுப் போக்குவரத்துக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் பொதுப் போக்குவரத்து சேவைகளை முன்னர் காணப்பட்ட வகையில் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை நீடித்தாலும் மாகாணங்களுக்கு உட்பட்டு பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படும்.

எவ்வாறாயினும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீடித்தால் பொதுப் போக்குவரத்து சேவைகள் இடம்பெற மாட்டாதென இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## நீண்டகாலம் சிறையிலுள்ள 24 சிறைக் கைதிகளுக்கு செப்.17 இல் விடுதலை

(கொழும்பு)

நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்து வரும்சிறைக்கைதிகளை நிபந்தனை அடிப்படையில் (Parole) விடுதலை செய்யும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட சபை 24 மறுவாழ்வு பெற்ற கைதிகளை விடுவிக்க பரிந்துரை செய்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

24 கைதிகளின் விடுதலையை சிறை நிர்வாகம் மற்றும் மறுவாழ்வு அமைச்சர் லோகன் ரத்வத்தே ஒப்புதல் அளித்துள்ளார்.

விடுவிக்கப்பட வேண்டிய கைதிகளின் பட்டியல் இன்னும் வெளியிடப்படவில்லை. அவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி விடுவிக்கப்பட உள்ளனர். (ம-3)

## கொரோனா தொற்றுறுதியான தாயொருவர் குழந்தை பிரசவித்த பின் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுறுதியான தாயொருவர், தனது மூன்றாவது குழந்தையை சத்திர சிகிச்சை மூலம் பிரசவித்த பின்னர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார்.

கம்பஹா - மாகவிட பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய தாயொருவரே இவ்வாறு உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தாய் சுகவீனம் காரணமாக கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சத்திர சிகிச்சை மூலம் குழந்தையைப் பிரசவித்துள்ளார்.

எவ்வாறாயினும், குழந்தை சிறந்த உடல் நலத்துடன் உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மனத்தை தன்வயப்படுத்தும் காரணங்கள் ஐந்து

கடந்த கால எண்ணப்பதிவுகள்- கர்மாக்கள் மனத்தின் மீது பலவிதமான விளைவை ஏற்படுத்துகின்றன. விழிப்புணர்வு, எச்சரிக்கையுணர்வு, ஞானம் மற்றும் தியானம் ஆகியவை கடந்த கால எண்ணப் பதிவுகளை அகற்ற உதவுகின்றன.

நீங்கள் தொடர்பு கொண்டுள்ள மக்களும் நிகழ்வுகளும்கூட உங்கள் மனத்தை விளைவாட்சிக்கு உட்படுத்துகின்றன. ஒரு குறிப்பிட்ட கூட்டத்துடன் உங்கள் மனம் ஒருவிதமாகவும் மற்றவர்களிடம் வேறு விதமாகவும் நடந்து கொள்கிறது.

கேள்வி: இவற்றைப் பற்றி நாம் கவலைப் படவேண்டுமா?

ஸ்ரீஸ்ரீ: வேண்டாம். இவற்றைக்கண்டு பரபரப்பு அடைய வேண்டாம். இவற்றைப் பற்றித் தெரிந்து வைத்திருந்தால் போதும்.

வாழ்வையும் மனத்தையும் இந்த ஐந்து காரணங்கள் வயப்படுத்திக் கொண்டாலும் ஆன்மா பல மடங்கு சக்திவாய்ந்ததுஎன்பதை நினைவில் கொள்க. நீங்கள் ஞானத்தில் வளர வளர அவை எல்லாவற்றையும் நீங்கள் வயப்படுத்துவீர்கள். (முற்றும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

திருவருள் எங்கும் நிறைந்திருப்பினும் அதனைக் குருவருள் மூலமே பெறவேண்டும். கடும் வெயிலில் பஞ்சை வைத்தால் வெதும்புமேயன்றி வெந்து சாம்பலாகாது. சூரிய காந்தக் கண்ணாடியை வெயிலில் வைத்து அதன் கீழே வரும் ஒளியில் பஞ்சை வைத்தால் அக்கணமே வெந்து சாம்பலாகும்.

சூரிய காந்தக் கண்ணாடி பரந்துவிரிந்துள்ள வெயிலின் ஆற்றலை ஒன்றுபடுத்தி பஞ்சை எரிக்கின்றது. அதுபோல் யாண்டும் விரிந்து பரந்துள்ள திருவருளை ஒன்றுபடுத்தி மாணவனுடைய வினைகளாகிய பஞ்சைக் குருவருள் சாம்பலாக்குகின்றது. கதிரவனது வெயிலும் சூரிய காந்தக்கண்ணாடியும் தேவைப்படுவது போல திருவருளும் குருவருளும் இறைவனைக் காண இன்றியமையாதவை. (தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

25

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### கிழக்கு மாகாணத்தின் முதலாவது கிழக்கு மாகாணசபைத் தேர்தல் 2008

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 37(1) ஆம் பிரிவின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒருங்கிணைந்து அமைக்கப்பட்ட மாகாண சபைக்காக 1988 ஆம் ஆண்டில் முதன் முதலாக வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டதாக முன்னர் பார்த்தோம். 1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 5(அ) பிரிவுக்கிணங்க கலைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட இவ் ஒருங்கிணைந்த வடக்கு- கிழக்கு மாகாண சபை சார்பாக 2008 ஆம் ஆண்டுவரையில் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

2008.03.07 ஆம் திகதி 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவின் கீழ் மாகாண சபையை நிறுவுவதற்கான வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அரசியல் அமைப்பின் 154(அ)(2) ஆம் உறுப்புரைக்கமைய ஜனாதிபதியினால் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டது.

அதற்கிணங்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் கிழக்கு மாகாண சபைக்குரிய அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளரினால் 2008.03.13 ஆம் திகதிய 1540/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. வேட்பு மனுக் காலக்கேடு 2008.03.27 ஆம் திகதி முதல் 2008.04.03 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையென நிர்ணயிக்கப்பட்டது. இந்த மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 35 ஆகும்.

இத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடுவது குறித்து நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிவுற்றன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அனைத்து முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிடுமாறு கிழக்கு முஸ்லிம் மதத் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக நடை பெற்ற பேச்சுவார்த்தைகளே இவ்வாறு தோல்வியில் முடிவுற்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சின்னமான மரச் சின்னத்தின் கீழ் போட்டியிட சில கட்சிகள் விரும்பவில்லை. இந்த நிலையில் முஸ்லிம் கட்சிகள் கூட்டணி அமைக்கும் முயற்சி படுதோல்வியில் முடிவுற்றது. இதனையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டது.

12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 15 சுயேச்சைக் குழுக்களும் மட்டக்களப்பு மாவட்டம் சார்பாகவும் 11 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 22 சுயேச்சைக் குழுக்களும் அம்பாறை மாவட்டம் சார்பாகவும், 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 19 சுயேச்சைக் குழுக்களும் திருகோணமலை மாவட்டம் சார்பாகவும் கையளித்த வேட்புமனுக்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இவ்வனைத்து மாவட்டங்களுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய சோஷலிஸ கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, விடுத லைப்புலிகள் மக்கள் முன்னணி மற்றும் சிங்களயே மகாசம்மத பூமி புத்திர பக்சய ஆகிய கட்சிகள் போட்டியிட்டன. ஈழவர் ஜனநாயக முன்னணி, ஜாதிக சங் வர்த்தன பெரமுன, ருகுணு ஜனதா பக்சய, ஸ்ரீலங்கா தேசிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி என்பன இரண்டு மாவட்டங்கள் சார்பாகவும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ் ஜன நாயக தேசிய முன்னணி, நவ சிஹல உறுமய, முஸ்லிம் விடுதலை முன்னணி மற்றும் லிபரல் கட்சி ஒரு மாவட்டத்திற்கும் போட்டியிட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 3 வேட்பு மனுக்களும், அம்பாறை மாவட்டத்தின் 7 வேட்புமனுக்களும், திரு கோணமலை மாவட்டத்தின் 4 வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன. அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்தில் 378 வேட்பாளர்களும், அம்பாறை மாவட்டத்தில் 561 வேட்பாளர்களும், திருகோணமலை மாவட்டத்தில் 403 வேட்பாளர்களும் போட்டியிட்டனர். வாக்கெடுப்பு 2008 மே மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 362 நிலையங்களிலும், அம்பாறை மாவட்டத்தில் 430 நிலையங்களிலும், திருகோணமலை மாவட்டத்தில் 278 நிலையங்களிலும் வாக்களிப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 29 நிலையங்களிலும், அம்பாறை மாவட்டத்தில் 30 நிலையங்களிலும், திருகோணமலை மாவட்டத்தில் 20 நிலையங்களிலும் வாக்கெண்ணல் நடைபெற்றது.

எந்த ஒருவராலும் வாக்கெடுப்போடு தொடர்புடைய எவ்வித முறைகேடான செயல்கள் பற்றிய அறிக்கையும் சமர்ப்பிக்கப்படாமையால், வாக்கெண்ணலிலிருந்து வாக்குச்சீட்டுகள் அகற்றப்படவோ அல்லது வாக்கெடுப்பு வறிதாக்கப்படவோ வேண்டிய தேவை எழவில்லை.

இம் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றிபெற்றது.

அதன்படி, அரசுடன் இணைந்து போட்டியிட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை என்பதுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிரணியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியமைத்துப் போட்டியிட்டிருந்தது. தேர்தல் முடிவுகள் அட்டவணை 11 இல் தரப்பட்டுள்ளன.

UNP- ஐக்கிய தேசியக்கட்சி, UPFA- ஐக்கிய மக்கள் சுதந்திரக கூட்டணி, JVP- மக்கள் விடுதலை முன்னணி, TDNF- தமிழ் ஜன நாயக தேசிய முன்னணி

இத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 12ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 11

முதலாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் - 2008

| மாவட்டம் | கட்சிகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | UNP | UPFA | JVP | TDNF | மொத்தம் |
| மட்டக்களப்பு | 4 | 6 | - | 1 | 11 |
| அம்பாறை | 6 | 8 | - | - | 14 |
| திருகோணமலை | 5 | 4 | 1 | - | 10 |
| Bonus | - | 2 | - | - | 2 |
| மொத்தம் | 15 | 20 | 1 | 1 | 37 |

UNP- ஐக்கியதேசியக்கட்சி, UPFA- ஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டணி, JVP- மக்கள் விடுதலை முன்னணி, TDNF- தமிழ் ஜனநாயகதேசியமுன்னணி

அட்டவணை 12 - முதலாவதுகிழக்குமாகாணசபைத்தேர்தல்2008 - வாக்களிப்பு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 330,950 | 202,443 | 21,088 | 181,355 |
| அம்பாறை | 409,308 | 293,389 | 20,997 | 272,392 |
| திருகோணமலை | 242,463 | 150,624 | 12,695 | 137,929 |
| மொத்தம் | 982,721 | 646,456 | 54,780 | 591,676 |

(தொடரும்...)

## 3 பிள்ளைகளின்...

அச்சுவேலி நாவற்காடு பகுதியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்ற சம்பவத்தில் பருத்தித்துறை இ.போ.ச சாலையில் சாரதியாக பணியாற்றிவரும் நாவற்காடு பகுதியைச் சேர்ந்தவரும் அல்வாய் பகுதியில் திருமணம் செய்து வசித்தவருமான தியாகராசா மதனபாலன் (வயது - 43) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் வயல் உழுது கொண்டிருந்தபோது மழை பெய்ததாகவும் அப்போது உழவு இயந்திரப் பெட்டிக்கு கீழ் பகுதியில் ஒதுங்கிஇருந்தபோது மின்னல் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்த நிலையில யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18,33,60)

## கர்ப்பவதிகள்...

ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் இருவர் கர்ப்பவதிகள் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

கிராமத்தில் சந்தேகத்திற்கிடமான 30 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதன்போது குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## தடுப்பூசி...

ரம்புக்வெல நேற்று அறிவித்தார்.

இந்தத் தடுப்பூசி திட்டம் மாவட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கூறினார்.

18 - 30 வயதுக்குட்பட்ட 3.7 மில்லியன் பேருக்கு இந்தத் தடுப்பூசி திட்டத்தை விரைவுபடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், இந்த வயதுக் குழுவில் உள்ள முன்னணி சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் 18 - 30 வயதுக்குட்பட்ட சில அத்தியாவசிய சேவைகளில் இணைக்கப்பட்டவர்களுக்கும் ஏற்கனவே தடுப்பூசிவழங்கப்பட்டது.

இதேவேளை, 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இன்னும் மூன்று வாரங்களுக்குள் முழுமையாகத் தடுப்பூசி போடப்படும். அதே நேரத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஒக்ரோபர் இறுதிக்குள் தடுப்பூசி வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

எந்தத் தடுப்பூசியை எடுத்தாலும் அது சிறந்த தடுப்பூசி என்ற உண்மையை கருத்தில் கொண்டு முழு இலங்கையரும் தடுப்பூசியைப் பெற வேண்டும் என சுகாதார அமைச்சர் வலியுறுத்தினார். (ம-3)

## 109 ஆண்கள்...

கத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 9,604 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 95 பெண்களும் 109 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 159 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையின் கோவிட் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் சிகிச்சை பலனின்றிநேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

மற்றைய நபர் வீட்டில் கோவிட் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று மரணமடைந்துள்ளார்.

குறித்த இருவரது சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அடக்கம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250)

## 106 பேருக்கு...

இல்லத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் முதியவர்கள் 68 பேர், ஊழியர்கள் நால்வர் என 72 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18,33,60)

## +3,619...

ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,952 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 378,168 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## அபாயகரமான...

இலங்கையில் கோவிட் மரணங்களானது 19 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் இந்தியாவை விடவும் மோசமான நிலையில் அபாயகரமான கட்டத்தில் இலங்கை உள்ளதாகவும் தெற்காசியாவில் கோவிட் வைரஸ் தாக்கத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாகவும் சுகாதார வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தூரநோக்குத் திட்டங்களை விடவும் மக்களை பாதுகாக்க உடனடித் தீர்மானங்களை இப்போது முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தெற்காசிய வலயத்திற்கான கோவிட் நிலைமைகள் குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையை முன்வைத்துள்ள நிலையில், சுகாதார தரப்பினர் அறிக்கை குறித்தும் இலங்கையின் நிலைமைகள் குறித்தும் கொண்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பில் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வு மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் நீலிகா மளவிகே கூறுகையில்,

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வுக் குழுவுடன் இணைந்து இலங்கையின் வைத்திய நிபுணர்கள் 15 பேர் ஆய்வு வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றோம்.

ஏற்கனவே இணைந்த அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்த நிலையில் தற்போது உலக சுகாதார ஸ்தாபனம் புதிய அறிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளது.

இதில் இலங்கை உள்ளிட்ட மூன்று நாடுகளில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஓகஸ்ட் மாதத்தின் இறுதிப் பகுதியில் 15 வீதத்தினால் அதிகரித்துள்ள தாகக் கூறப்படுகின்றது.

சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்,

கடந்த வாரத்தில் மாத்திரம் தெற்காசிய பிராந்தியத்தில் 14,000 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. இலங்கை, இந்தியாவின் மரணவீத அதிகரிப்பினால் மோசமான பதிவுகள் பதிவாகியுள்ளன.

எனவே நிலைமைகளைக்கட்டுப்படுத்த துரிதமான அதேபோல் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இப்போதும் நாம் ஆபத்தான கட்டத்தில் உள்ளோம் என்பதை ஏற்றுக்கொண்டு தற்போது வைரஸ் பரவலை கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய வேண்டும்.

இப்போது நீண்டகால தூரநோக்குத் திட்டங்களை ஆராய்ந்து கொண்டிருக்காது மக்களை காப்பாற்றும் தீர்மானங்கள் எடுப்பதே முக்கியம். ஆசியாவில் மிக மோசமான வைரஸ் தாக்கம் கொண்ட நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்படுகின்றது என்பதை மனதில் வைத்து தீர்மானம் எடுக்க வேண்டும் என்றார். (ம-3)

### யாழ்.பல்கலைக்கழகத்தில்

# மனித உயிரியல் விஞ்ஞான துறையை ஆரம்பிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் நான்காவது புதிய துறையாக மனித உயிரியல் விஞ்ஞானத் துறை உள்வாங்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மூதவையின் பரிந்துரையுடன், பல்கலைக்கழகப் பேரவையின் அங்கீகாரத்துடன் பல்கலைக்கழகத் துணைவேந்தரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு கடந்த மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர நிர்ணயக் குழு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியவற்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்தத் தீர்மானமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மனித உயிரியல் விஞ்ஞானத் துறைக்கான முன்மொழிவு அறிக்கையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின், வர்த்தமானிஅறிவித்தல் மூலம் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-3)

## முல்லையில் உயிரிழந்தவருக்கு கொரோனா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் உயிரிழந்த 59 வயது ஆண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்த நிலையில் அவருடைய சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டு பிசிஆர் மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தன.

அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ்.போதனா...

பெப்ரவரிஆரம்பத்தில் சென்றிருந்த அவர், தனது பொறுப்பை தற்காலிகமாக பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடம் ஒப்படைத்தார்.

எனினும் தற்போது விடுமுறையில் நாடு திரும்பிய மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தியை பணிப்பாளர் பொறுப்பை ஏற்க சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டது.

அதற்கமைய தனது மேற்படிப்பை பிற்போட்டு அவர் இன்று காலை 8 மணிக்கு தனது கடமைகளை மீளப் பொறுப்பேற்கவுள்ளார். (ம-3)

## யாழ்ப்பாணம்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கொரோனாவுக்காக சிகிச்சை பெற்ற நெடுந்தீவைச் சேர்ந்த 70 வயதுடைய ஆண் ஒருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த 72 வயதுடைய ஆண் ஒருவரும் கந்தர்மடத்தைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண்ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அல்வாயைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலம் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட்-19 தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

தெல்லிப்பழை மருத்துவமனையில் ஒருவர் சடமாக ஒப்படைக்கப்பட்ட நிலையில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கோவிட்-19 தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளில் 194 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகத்தினால் நாளாந்தம் வெளியிடுகின்ற அறிக்கையிலேயே குறித்த எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வேலணையில் 20 பேர், ஊர்காவற்றுறையில் 04 பேர், காரைநகரில் 22 பேர், யாழ்ப்பாணத்தில் 14 பேர், நல்லூரில் 11 பேர், சண்டிலிப்பாயில் 44 பேர், உடுவிலில் 11 பேர், தெல்லிப்பழையில் 27 பேர், கோப்பாயில் 18 பேர், சாவகச்சேரியில் 03 பேர், கரவெட்டியில் 13 பேர், மருதங்கேணியில் 07 பேர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## ஜனாதிபதி செயலணியால் பயனில்லை

# கோவிட்டை தேசிய பிரச்சினையாக கருதி சர்வகட்சி கூட்டத்தை நடத்துங்கள்

## ஜனாதிபதியிடம் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கோரிக்கை



*(கொழும்பு)*

**கோவிட் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும் பொருளாதாரத்தை முன்னேற்றவும் பல ஜனாதிபதி செயலணிகள் உள்ளன. ஆனால், ஒன்றாலும் பயனில்லை என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

**எனவே கோவிட் பரவலை தேசிய பிரச்சினையாகக் கருதி சர்வகட்சி கூட்டத்தை நடத்துமாறு ஜனாதிபதியிடம் பணிவுடன் கோரிக்கை விடுக்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.**

பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்றபோது நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். இன்று அந்த மகிழ்ச்சி தவறானது என உணரப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அபயராம விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இந்தவிடயத்தைக்குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று பல ஜனாதிபதி செயலணிகள் உள்ளன. ஆனால், எதிலும் பயன்கிடைக்கவில்லை. கோவிட் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வகட்சிகூட்டத்தை உடனடியாக நடத்துவது அவசியமாகும்.

அரசியல் மட்டத்தில் முரண்பட்டுக் கொள்ளும் தருணம் இதுவல்ல. ஆகவே, தற்போதைய நிலையை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி செயற்பட்டால் மாத்திரமே தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

சுகாதார அமைச்சு பலவீனமடைந்துள்ளது. சுகாதார அமைச்சில் உள்ள குறைபாடுகளுக்குத் தீர்வு காணாமல் சிறந்த சுகாதார சேவையை எதிர்பார்க்க முடியாது. செல்வத்தை வழங்குமாறு மக்கள் கோரவில்லை.

உயிர்வாழ பாதுகாப்பு சூழலை ஏற்படுத்துமாறும் மூன்று வேளை உணவு அல்ல, ஒரு வேளை உணவையாவது பெற்றுக் கொள்வதற்கான சூழலையே மக்கள் கேட்கிறார்கள்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்கும்போது மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால், இன்று அது தவறு என்று எண்ணுகிறார்கள். அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

சீனியின் விலை என்றும் இல்லாத அளவுக்கு உயர்வடைந்துள்ளது. இதற்கு யார் பொறுப்புக் கூறுவது? அத்தியாவசியப் பொருட்களின் விலை இன்னும் எந்தளவுக்கு அதிகரிக்கப்படும் என்பதைக் குறிப்பிட முடியாது எனக் கூறியுள்ளார். (ம-03)

German, Holland(Netherland), Swiss, Ostria நாடுகளுக்கான மொழி வகுப்புக்கள் German Embassy இன் A1 Certificate இற்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு : Mrs.P.Kajenthini
077 160 4823
Jaffna
(7040)

காணி விற்பனைக்கு
நீர்வேலி தெற்கு, கரந்தன் பகுதியில் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு - 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
( தரகர் தேவையில்லை )
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(7331)
077 814 7389, 077 614 7333

# யாழில் கொரோனாவால் இளம் ஊடகவியலாளர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றுக்குள்ளான இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஷ்சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை காலமானார்.

மேற்படி ஊடகவியலாளர் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.03 மணியளவில் தனது முகநூலில் பதிவொன்றை வெளியிட்டிருந்தார்.

“கடந்த ஐந்து நாட்களாக இலேசான தலைவலி இருமலுடன் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தேன். சற்றுத் தேறி வரும் நிலையில் இன்று அன்டிஜன் சோதனையில் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. குணமடைந்த பின்னர் தடையின்றி எனது பணிகள் தொடரும். அதுவரை காத்திருங்கள்” எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றுப் பிற்பகல் அவருக்குத் திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்ட நிலையில் குடும்பத்தினர் அவரைச் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அனுமதித்த போதும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் கச்சாயைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் பிரகாஷ் சுயாதீன ஊடகவியலாளராக உள்நாட்டுப் பத்திரிகைகள் பலவற்றிற்குச் செய்திகள், கட்டுரைகள் எழுதி வந்தார். அதுமாத்திரமன்றி உள்நாட்டு, வெளிநாட்டு இணையத் தளங்களுக்கும் செய்திகள், கட்டுரைகளை எழுதி வந்ததுடன் இணையத்தளங்கள் சிலவற்றின் பதிவேற்றுனராகவும் பணியாற்றி வந்துள்ளார்.

இவர் தான் மரணமடைந்தால் தனது உடலை மருத்துவ பீடத்துக்கு ஒப்படைக்குமாறு கடிதம் ஒன்றை எழுதியாழ். பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-03,18,33)

Tamils Help Line
தமிழர் உதவிச் சேவை மற்றும்
மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம்
இணைந்து வழங்கும்
இப் பயிற்சியில் 500 பேர் பங்கு பற்றலாம்.
இலங்கை மக்களுக்கான
கொரோனா தற்காப்பு யோகா பயிற்சி
கொடிய கொரனாவின் தீவிரத்தில் இருந்து உங்களை தற்காத்துக் கொள்ளுங்கள்!
சமூக இடைவெளி | முகக் கவசம் | தனிமைப் படுத்தல்
அரச சுகாதார நடைமுறைகளை பின்பற்றல் | அத்துடன்
இவ்விசேட யோகா பயிற்சியையும் பயின்று உங்களை தற்காத்துக் கொள்ளுங்கள்!
ONLY 20 MINUTES YOGA
கொரோனா தாக்கத்தின் பேரவலத்தை எதிர்நோக்கி இருக்கும் இலங்கை மக்கள் அதிலிருந்து தம்மை தற்காத்துக்கொள்ளவென யோகா நிபுணரால் விசேடமாக உருவாக்கப்பட்ட இந்த 20 நிமிட யோகா பயிற்சியின்மூலம் உங்கள் Oxygen மற்றும் நோயெதிர்ப்பு தன்மையை அதிகரித்து உங்களை தற்காத்துக் கொள்ளுங்கள்.
இலங்கை நேரம்
04 Sep 2021 at 5:00-6:00 PM
Zoom ID: 869 8455 1106 & Passcode: 052021

பயிற்சியாளர்/Trainer
மருத்துவர். கௌரிபாலன் Dr. Gowribalan
ஹத யோகா பயிற்சியாளர் UK Hatha yoga Teacher
Tamils Help Line | www.tamilshelpline.org | +44 203 5001573 | +44 7525 050010 | contact@tamilshelpline.org

### பதுக்கிய நிலையில் கைப்பற்றப்பட்ட

# அத்தியாவசிய பொருட்கள் நிவாரண விலையில் வழங்கப்படும்

### இராஜாங்க அமைச்சர் லசந்த

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களைப் பதுக்கி வைக்கும் மாபியாக்களைக் கட்டுப்படுத்தவும் நாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை நிவாரண அடிப்படையில் வழங்கவும் ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளார்.

இச்சட்டத்தினால் நாட்டு மக்கள் இனி பயன்பெறுவார்கள்.

அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதற்காகவே அத்தியாவசிய பொருட்கள் சட்டவிரோதமான முறையில் பதுக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்படும் அத்தியாவசிய பொருட்கள் இனி நிவாரண விலைக்கு அமைய விற்பனை செய்யப்படும் என கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். (ம-03)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.